பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை

Registered as a Newspaper பக்கங்கள்: 8 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | புரட்டாதி 13 | 29 9 94 | வியாழக்கிழமை | ஓசை 223

## எதிர்வரும் சனிக்கிழமை முதல் முதியோர்வாரம் அனுஷ்டிப்பு

நாடு பூராகவும் தேசிய முதியோர் வாரம் 1994-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 01 ஆம் திகதி முதல் 07ஆம் திகதி வரையிலான காலப்ப குதியில் கொண்டாடுமாறு சகலபொது அமைப்புக்களுக்கும் சுற்று நிருபமூலம் புனர்வாழ்வுபுனரமைப்பு, சமூக நலத்துறை அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாணம்சமூக சேவைகள் திணைக்களம் திருகோணமலை சமூக சேவைப் பணிப்பாளர் திரு. அ. இ. பத்மநாதன் கேட்டுள்ளார். அச்சுற்று நிருபத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது: ''இந்தக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அக். 13, 14-இல் ஆரம்ப கட்டப்பேச்சுக்கள்; அரசாங்க தரப்பு பிரதிநிதிகள் யாழ். வருவர்

## பாதுகாப்பிற்கு புலிகள் ஏற்பாடு

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் மத்தியிலான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் அடுத்த மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

முதற்கட்டமாக இரு தினங்கள் இப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும். இப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வரவிருக்கும் அரச பிரதிநிதிகளுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்யும்.

இவ் ஆரம்பகட்டப் பேச்சு வார்த்தையில் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளாக பிரதம மந்திரியின் செயலாளரும், சட்டத்தரணியுமான திரு கே. பலபத்த பெண்டி, தகவல்துறை அமைச்சின் செயலாளர் திரு. லயனல் பெர்ணாண்டோ, இலங்கை வங்கிப் பணிப்பாளர் திரு. ஆர். ஆசீர்வாதம் மற்றும் டிசைன் கொன் சோற்றியம் என்னும்நிறுவனத்தின் பணிப்பாளரும், கட்டிடக்கலைஞருமான என். எல். குணரெத்தினாவும் கலந்து கொள்வார்கள். அக் குழுவிற்குப் பிரதம மந்திரியின் செயலாளரான கே. பலபத்த பெண்டி தலைமை தாங்குவார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர், திரு. கே. கரிகாலன், யாழ்-மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு ஆ. ரவி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர்திரு. ச. டொமினிக் ஆகியோர் பங்கு பற்றுவர் கொழும்பில் அமைச்சர

[6ஆம் பக்கம் பார்க்க[

## தமிழீழத்தின் புரட்சிப் பெண்கள் வரலாறு காணா வீராங்கனைகள்

### சாகரவர்த்தனா தகர்ப்பு குறித்து மகளிர் படையணி

(யாழ்ப்பாணம்)

பெண்கள்பற்றிய பிற்போக்குத் தனமான கருத்துக்களும் மூட நம்பிக்கைகளும் ஆழ வேரோடியிருக்கும் எமது சமூகத்தில், சமத்துவம் வேண்டியும் மண்ணின் விடிவை நாடியும் தமிழீழத்தின் புரட்சிப் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கின்றனர். தம்மை அழிப்பதன் மூலம் எதிரியின் இலக்குகளை அழிக்கும் கரும்புலி வீராங்கனைகளாக உருவாகினர்.

இவ்வாறு சாகரவர்த்தனா யுத்தக் கப்பலைத் தகர்த்து வீரசாதனை புரிந்த கடற் கரும்புலிகள் நினைவாக விடுதலைப் புலிகள் மகளிர் படையணி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கை வருமாறு:

தமிழீழ விடுதலைப் போராட்டமானது எண்ணற்ற மாவீரர்களின் ஈகங்களாலே பலமாகக் கட்டி எழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றது. சாவுக்கு அஞ்சாத வீரர்களாக, சாவையே வென்ற வீரர்களாக அவர்கள் எங்கள் மண்ணுக்கு உரமூட்டிவருகின்றனர். அதைவிட உலக வரலாற்றிலே எங்குமே காணமுடியாத அற்புதமான வீரர்களாகக் கரும்புலிகள் விளங்குகின்றார்கள். சாவையே வாழ்வாக்கி சரித்திரம் படைக்கும் உன்னத வீரர்கள் அவர்கள்.

இந்தக் கரும்புலிகள் வரிசையிலே கப்டன் அங்கயற்கண்ணி ஒரு புதிய அத்தியாயத்தை எழுதினார். அவரைத் தொடர்ந்து லெப். கேணல் நளாயினியும் மேஜர் மங்கையும் அந்த அத்தியாயத்திற்கு புதிய பரிமாணம் கொடுத்

[6ஆம் பக்கம் பார்க்க]

## இருநாள் பேச்சுக்களின் பின்னரே யுத்தநிறுத்தம் குறித்து முடிவு

### அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுடன் அடுத்த மாதம் நடத்தப்படும் இருநாள் பேச்சுக்களின் பின்னரே யுத்த நிறுத்தம் குறி... சிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

எதிர்வரும் 13-ம், 14-ம் திகதிகளில் விடுதலைப் புலி... தாக தெரிவித்த இவர் அதன் பின்னர் யுத்தநிறுத்தம் மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து இறுதி முடிவு எடுத்

## கடலரக்கனை கடற்கரும்புலிகள் அழித்திருப்பது ஏழுச்சிக்குரியது

விடுதலைப் புலிகளுடன் அடுத்த மாதம் நடத்தப்படும் இருநாள் பேச்சுக்களின் பின்னரே யுத்த நிறுத்தம் குறித்து முடிவு எடுக்கப்படும்என தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

எதிர்வரும் 13-ம், 14-ம் திகதிகளில் விடுதலைப் புலிகளுடன் இருநாள் ஆரம்ப பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாக தெரிவித்த இவர் அதன் பின்னர் யுத்தநிறுத்தம் மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பேச்சுகள் ஒருநிலையை எட்டுவதற்கு குறைந்தது ஒருவருடம் தேவை

## பிரதமர் சந்திரிகா

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கென மேற்கொள்ளப்படவிருக்கும் பேச்சு வார்த்தைகள் ஒரு நிலைக்கு வருவதற்கு குறைந்தது ஒரு வருட காலம் செல்லும் என தான் எண்ணுவதாக பிரதமர் சந்திரிகா குமார துங்கா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பத்திரிகையாளர் மாநாட்டில் இக் கருத்தை அவர் தெரிவித்துள்ளார். ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து யுத்த நிறுத்தம்மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யுத்தம் ஒன்றை மேற்கொள்வது அல்லது அதனை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடனான ஆரம்ப பேச்சில் சமாதானத்திற்கான வழி ஆராயப்படும்

## - அமைச்சர் அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆரம்ப பேச்சு வார்த்தைகளின்போது சமாதானத் திற்கான வழிமுறைகள் ஆராயப்படும்என பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில் இது தொடர்பான திட்டங்களை வகுக்கவும் பேச்சுக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்றும் தீர்மானிக்கவும் இந்த ஆரம்பப் பேச்சுக்கள் பயன்படும் என்றார் வடக்கு-கிழக்கில் தற்போது நடைபெறும் மோ

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடி
# 14 சிறிலங்கா இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு தொப்பிகல காட்டில் உள்ள காத்தாண்டிக் குளம் இராணுவ முகாமிலிருந்து தண்ணீர் எடுக்கச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்தியதிடீர்த்தாக்குதலில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 5 பேர் காயங்களுடன் தப்பிவந்து விட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

நேற்று அதிகாலை குடிதண்ணீர் எடுக்க வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் இயந்திரத் துப்பாக்கிகள் கொண்டு தாக்குதல் நடத்தியதாக அவ் வட்டாரங்கள் மேலும் கூறுகின்றன.

இதேவேளை இத் தாக்குதல் பற்றி பத்திரிகையாளர் மாநாட்டில் குறிப்பிட்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த கிழக்கில் புலிகள் ஊடுருவியிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# அழித்திருப்பது எழுச்சிக்குரியது

## யுத்தக்கப்பல் தகர்ப்பு வெற்றிநாள் குறித்து அரசியல்துறை

வடதமிழீழ கடற்பரப்பில் மையங்கொண்டபடி எமது குடியிருப்புகள் மீதும் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீதும் சிங்களக் கடற்படையின் போர்க்கப்பல்கள் நிகழ்த்திவரும் கொலைத் தாக்குதலினால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் கொஞ்சநஞ்சமில்லை.

தத்தமது குடும்பங்களின் ஜீவனோபாயங்களை ஓட்டுவதற்காக கரையோரம் வலைவீசும் எமது மீனவர்களது உயிர்களை நடுக்கடலில் இருந்தபடி வலைவீசிப் பிடிக்கும் கப்பல்களில் சாகரவர்த்தனாவும் ஒன்று-

இந்தக் கடலரக்கனைலெப். கேணல் நளாயினி தலைமையில் சென்ற கடற்கரும்புலிகள் வெடிகுண்டு வீசிப் பிடித்து அழித்திருப்பது மகிழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் உரியது என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு சாகரவர்த்தனா யுத்தக்கப்பல் தகர்ப்பு வெற்றி நாள்குறித்து அரசியல் துறையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கை வருமாறு:

சிலாவத்துறைக் கடற்பரப்பில் நிலை கொண்டிருந்த சிங்களக் கடற்படையின் போர்க்கப்பலான சாகரவர்த்தனாவை தகர்த்த கரும்புலித் தாக்குதலின் வெற்றி நாளை ஒரு எழுச்சி நாளாக - தமிழீழம் கொண்டாடஇருக்கிறது.

19-09-94 அன்று இரவு படைக்கப்பட்ட அந்த வீர சாதனையின் பத்தாவது நாளான இன்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# 'யாழ்தேவி' முறியடிப்பின் 1-ம் ஆண்டுநினைவுநாள்

சிறிலங்கா இராணுவத்தின் ஒப்பரேஷன் யாழ்தேவி நடவடிக்கை முறியடிப்பின் முதலாம் ஆண்டு நினைவு நாளும் நினைவுக்கல் நாட்டலும் இன்று இடம்பெறவுள்ளது.

புலோப்பளை - அல்லிப்பளையில் சிறிலங்கா இராணுவத்தை இடைமறித்து தாக்கிய இடத்தில், 82 மாவீரர்களின் நினைவாக நினைவுக்கல் நாட்டல் இன்று மு.ப. 10 மணிக்கும், இச்சாதனையின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் கூட்டம் நாளை இரவு 7.30 மணிக்கு புலோப்பளை பிரதாபன் ச.ச. நிலைய முன்றலிலும் நடைபெறும்.

இதுகுறித்து மாவீரர் பணிமனை விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 29-ம் திகதி கனரக வாகனங்கள் சகிதம் விமானப்படையின் உதவியுடன் யாழ். குடாநாட்டு மக்களின் வன்னிப்பெரு நிலப் பரப்புடனான கிளாலிப்போக்குவரத்துப் பாதையைத் தடை செய்து முற்றுகைக்குட்படுத்தும் நோக்கத்துடன் ஒப்பறேசன் 'யாழ்தேவி' என்

(6ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி சூடு

(நல்லூர்)

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் கடந்த சில தினங்களாக கடற்கரையோரங்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை விட்டுவிட்டு மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக இப்பகுதியில் மீன்பிடித் தொழிலைச் செய்துவரும் மீனவர்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# கடற்படைச் சூட்டிற்கு மீனவர் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அராலிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது நேற்று அதிகாலை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார்-

காக்கையன்வீதி ஆனைக்கோட்டையை சேர்ந்த சிங்கராசா சிவசுதன் (வயது 17) என்பவரே கையிலும், காலிலும் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்தவராவார்-

துப்பாக்கிச் சூட்டிற்குஇலக்கான இவர் மற்ற மீனவர்க

(6ஆம் பக்கம் பார்க்க)

# காத்தான்குடியில் காவலரண்மீது தாக்குதல்

## ஒரு சிப்பாய் பலி; ஆயுதம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் ஒன்று மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஒரு ராணுவச் சிப்பாய் பலியானார்; ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

இரவு 10.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலின் போது அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

அவற்றின் விபரம் வருமாறு

★ ரி 56-2 ரக துப்பாக்கி -01
★ மகசீன் -01
★ நடுத்தர ரவைகள் -17

## வரி விளம்பரம்

### நினைத்தாலே இனிக்கும்

மணலாறு கச்சான் அல்வா சுத்தமானது, சுவையானது அனைவரும் விரும்பிச் சுவைப்பது. உற்பத்தியாளர் பாரதி சிறுகைத்தொழில் நிறுவனம், சப்பியன் லேன் கொக்குவில். எல்லா இனிப்பு வியாபாரிகளிடமும் பெற்றுக் கொள்ளலாம். (9506)

### விற்பனைக்கு

சப்புப்பலகைப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. 4'- 3' 2½' தொடர்பு:- டாக்டர் ம. சிற்றம்பலம் பெரியரசடி சாவகச்சேரி. (9528)

### விற்பனைக்கு

நல்லின பிறிமா புறோயிலர்கோழிக்குஞ்சுகள் (10 நாட்கள் முடிந்தவை) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டி பண்ணை இராசவீதி கோப்பாய் (சி-10421)


## பாடசாலையில் மலசலகூட வசதி இல்லை

]யாழ்ப்பாணம்]

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் பாடசாலையில் போதிய மலசல கூட வசதியில்லை என கூறப்படுகின்றது. கற்பிக்கும் 31 ஆசிரிய ஆசிரியைகளுக்கும் கற்கும் சுமார் 980 மாணவ மாணவிகளுக்கும் பொதுவாக ஒரு மலசல கூடம் கூட இல்லையென தெரிவிக்கப்பட்டது. மாணவர்கள் பெரும்பாலானோர் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் ஆகையால் மேற்படி வசதியின்மை அவர்களுக்கு பிரச்சினையாக தோற்றுவதில்லையென்றும் ஆசிரிய ஆசிரியைகளே இப்பிரச்சினையால் பெரும் 'சங்கடத்தை' எதிர்நோக்குவதாகவும் பிரஸ்தாப பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. [22]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப். நரேந்தினி**

**அன்னலட்சுமி அப்பாச்சாமி**

**(லதா)**

தாயின் மடியில் 30-04-1976 — தாயக மண்ணில் 29-09-1993

வன்னி மண்ணிலே வந்து உதித்தாய்
அன்ன லட்சுமியாய்
நல் தலைவன் சேனையிலே
நீ திகழ்ந்தாய்-நரேந்தினியாய்
சிறுவயதில் துப்பாக்கி ஏந்தி நீ நடந்தாய்
ஈழமண்ணின் இருள் போக்கிட
ஆயிரமாயிரம் சிங்கள அரக்கர் படையினர்
யாழ்தேவி படையெடுத்து
யாழ்ப்பாணம் நோக்கிடவே
புலோப்பளையில் வழி மறித்து
புலிகள் சமர் செய்திடவே
வெற்றியீட்டித் தந்து விட்டு
வீழ்ந்த புலி வீரர்களுள் விதையானாய் நீயும்
அணையாத தீபமாய் எங்கள் இதயங்களில்
இடம் பிடித்துக் கொண்டாய்.

என்றும் உமதுநினைவால்வாடும்
குடுப்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

57, கணேசபுரம், கிளிநொச்சி. (9550)

## நினைவு கூருகிறோம்...

## 29. 09. 1994

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு- கொம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண்ணடைந்து பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ரவி** (அருளானந்தம் ரவீந்திரகுமார் - வந்தாறுமூலை - மட்டு)

1990ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**வேலு** [சண்முகம் சிவசாமிவேலு - பிராமணாளங்குளம் - வவுனியா]

யாழ் - கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சிவ்தர்சன்** ( — சண்முகம் - வவுனியா)

இதே பகுதியில் ஏற்பட்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண்ணடைந்திருந்து வீரச்சாவெய்திய,

**அனார்க்கலி-மீரா** (சுவர்ணசுந்தரி சாம்பசிவம் - சிறிமுருகன் குடியேற்றம் - வல்வெட்டித்துறை]

**நாயகி பவுண்** (சாந்தி சின்னராசா-கோண்டாவில் வடக்கு-யாழ்)

வவுனியா-கச்சக்கொடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம், மற்றும் ஊர்காவற்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கீதன்** (விஜயரத்தினம் தெம்பநேசன்-பெரியகோமரசங்குளம்-மட்டு)

**சையன்** ( - - வவுனியா)

**காந்தருபன்** (நடராசா சிவநாதன் - புதுக்குளம் வவுனியா)

யாழ்-அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் வேவு பார்க்கச் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தின் மிதிவெடி வெடித்ததில் வீரச்சாவெய்திய,

**வில்வன்-சுதன்** (கந்தசாமி ஜெயக்குமார்-இடைக்காடு, அச்சுவேலி-யாழ்

1993-ம் ஆண்டு யாழ்-அச்சுவேலிப் பகுதிநோக்கி முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். இன்பன்** (கிட்ணன் ரவிச்சந்திரன்-ஒட்டறுத்தகுளம், வவுனிக்குளம் (கண்டி)

**2-ம் லெப். தமிழ்க்கொடி-சிவபாலன்** பாலசிங்கம் மகேந்திரம் யோகபுரம், மல்லாவி கிளி)

**சதானந்தன் -சதா** (சின்னத்தம்பி சந்திரவடிவேல்-பள்ளிப்பாலம், புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**பானுதேவன்** (முத்தையா சிவகுமார்-பூந்தோட்டம்-வவுனியா)

யாழ்தேவி நடவடிக்கையின்போது புலோப்பளையில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் முன்னேறமுயன்ற போது ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். கேணல் நாயகன்-நரேஸ்** (சிங்கராசா அருள்நாயகம்-புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**மேஜர் துசியந்தன்** (தர்மலிங்கம் ஜெயக்குமார்-புதுக்குளம்வீதி, ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)

**மேஜர் குமரன்** (மணியம் சிறிசிவநாதன்- இருபாலை வீதி கோப்பாய் (வவுனியா)

**மேஜர் உதயகுமார்-கிச்சான்** (சீமான்பிள்ளை கிறிஸ்ரி-வேப்பங்குளம், அடம்பன்-மன்னார்)

**மேஜர் செந்தில்** (அந்தோனிப்பிள்ளை பத்மநாதன் - கீரி - மன்னார்)

**மேஜர் செல்வம்** [சோமு முருகேஸ் - 5-ம் கட்டை, எருக்கலம்பிட்டி - மன்னார்]

**மேஜர் யாழிசை-மனோ** (செல்வராணி திருலோகசிங்கம் - கீரிமலை வீதி - காங்கேசன்துறை)

**லெப். மகேந்திரம்-மகேஸ்** [கந்தப்பிள்ளை விஜிதரன் - வற்றாப்பளை, முள்ளியவளை]

**லெப். சீலன்-சலீம்** (தர்மகுலசிங்கம் சுந்தரராஜன் - மல்லாவி, யோகபுரம் - கிளிநொச்சி)

**லெப். சங்கர்** (கனகரத்தினம் கனகசிங்கம் - கள்ளிக்குளம் - வவுனியா)

**லெப். ஒப்பிலாமணி-சிவராஜ்** (அந்தோனிப்பிள்ளை செல்லத்துரை - கப்பாச்சி - செட்டிகுளம் - [புத்தளம்]

**லெப். செல்வன்** [கனகரட்ணம் ஜீவரட்ணம் - மாங்குளம் (அவிசாவளை)

**லெப்- கில்மன்** (கிருஸ்ணசாமி சின்னவன் - இரத்தினபுரம் - கிளிநொச்சி கண்டி)

**லெப். விந்தன்** (கந்தையா சிவரூபன் - தாமரைக்கேணியடி - குமுழமுனை]

**லெப். சிவனேசன்** ஆறுமுகம் பிரதீபன் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**லெப். சிவம்** (செல்வம் ரவி - வாழைச்சேனை - மட்டு]

**லெப். கார்வண்ணன் ரகுநாத்** (குணரெட்ணம் குணராஜ் - வேலணை கிழக்கு - வேலணை)

**லெப். இளமுருகன்** (ஐயாத்துரை அன்பழகன்-மானிப்பாய் (புங்குடுதீவு)

**லெப். ஈசுவரன்-தியாகு** (இராசேந்திரன் யோகநாதன் - கந்தரோடை ஒழுங்கை - சுன்னாகம்)

**லெப். ஐயாத்துரை** (வன்னியசிங்கம் விஜயகுமார் - அடம்பன் - மன்னார் (வண்ணார்பண்ணை)

**லெப்.உமா** அந்தோனிப்பிள்ளை தேவமோகன்-இலுப்பைக்குளம், நேரியகுளம் வவுனியா)

**லெப். குமணன்** (செல்வரெட்ணம் - குணரெட்ணம் ஜீவநகர், முருங்கன்-மன்னார்)

**லெப். தம்பித்துரை** (தாசன் அன்ரன்-பரப்பாங்கண்டல்-மன்னார்)

**லெப். சிவன்** (பாக்கியராஜா மங்களேஸ்வரன்-உப்புக்குளம்-மன்னார்]

**லெப். சிவானந்தன்** (அந்தோனி யூட்-கற்கடந்தகுளம், முருங்கன்-மன்னார்]

**லெப். தாரகா** (ராமசாமி சந்திரா-மடு கதிமுகாம் நித்தியநகர்-வவுனியா)

**2-ம் லெப். சந்திரன்** (அருளப்பு பிலிப்சாள்ஸ்-புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

**2-ம் லெப். திருவள்ளுவன்-ரகீம்** [சுப்பிரமணியம் கணேசமூர்த்தி-பூவரசங்குளம்-வவுனியா)

**2-ம் லெப். நவீனன்** (செல்வராசா செல்வேஸ்வரன் முள்ளிவாய்க்கால்-முல்லைத்தீவு)

**2-ம் லெப். மதியழகன்** (பசுபதிப்பிள்ளை தயாரஞ்சிதன்-பூவரசங்குளம்-வவுனியா]

**2-ம் லெப். நம்பியாண்டான்** (செல்லத்துரை பிரபாகரன்-மருக்காரம்பளை-வவுனியா)

**2-ம் லெப். அரவிந்தன்-செந்தமிழ்** (வெற்றிவேல் ஞானசேகரம்-சேமமடு, ஓமந்தை)

**2-ம் லெப். களப்பாடி** (செல்லத்துரை புனிதகுமார்-1-ம் யூனிற், முரசுமோட்டை-பரந்தன்)

**2-ம் லெப். நீதிதேவன்** (ஆணுப்பிள்ளை ரகு-வட்டக்கண்டல்- அடம்பன்-மன்னார்]

**2-ம் லெப். வேல்விழி-அபிசா** (சூசைகுரூஸ் லெனிற்கொலஸ்றிக்கா-பெரியமடு-தலைமன்னார்)

**2-ம் லெப்.செல்வம்-தனா** (சரிட்டீன் செல்வராணி-வத்திராயன் [வடக்கு-வடமராட்சி)

**2-ம் லெப். சசி** (சண்முகநாதன் வசந்தலாவேணி-வன்னேரிக்குளம்-மாங்குளம்)

**2-ம் லெப். வாசுகி** (குருசுமுத்து தேவதிரவியம்-செம்மண்குன்று-பூநகரி)

**2-ம் லெப்.சீத்தாலட்சுமி** (சுப்பன் முனியம்மா

01-ம் ஆண்டு


3-ம் ஆண்டு


01-ம் ஆண்டு நினைவஞ்சலி

புலோப்பளை வரலாற்று நேரடிச்சமரில் வீரச்சாவு

3-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆ. க. வெ. கட்டைக்காட்டு நேரடிச்சமரில் வீரச்சாவு





(சாள்ஸ் அன்ரனி விசேட படைப்பிரிவு)

**மேஜர் மனோ-யாழிசை**
திருலோகசிங்கம் செல்வராணி
[காங்கேசன்துறை]
பிறப்பு: 12-07-1972
வீரச்சாவு: 29-09-1993

**வீரவேங்கை நவீனன்**
திருலோகசிங்கம் அன்பழகன்
[காங்கேசன்துறை]
பிறப்பு: 29-01-1974
வீரச்சாவு: 18-07-1991

காங்கேசன்துறையில் பூத்தெழுந்த புலிவீரர்களே
எம்மினத்தின் விடுதலைக்காய் இளம்வயதில் சீற்றம் கொண்டீர்
தமிழீழ மண்ணில் விசுவாசம் கொண்டு
சின்னவயதிலே போர்க்களம் குதித்தீரே
தன்னுயிரை துச்சமென நினைத்து
எதிரியை நோக்கி வீறுகொண்டு எழுந்தீரே
உம் உயிர்மூச்சில் எண்ணிய எண்ணம்
தன்னை நிறைவு நாம் செய்வோம் ஓர் நாள்
எழில் கொஞ்சும் நாடு காண்போம்.

- குடும்பத்தினர்

முகவரி: புதுவளவு, பொலிகண்டி
2-ம் லெப். ஜெயக்குமார் வீதி.
வல்வெட்டித்துறை.

[9538]

---

**மேஜர் யாழிசை-மனோ** (செல்வராணி திருலோகசிங்கம் - கீரிமலை வீதி - காங்கேசன்துறை)

**மேஜர் சுகன்யா** (சுபாசினி நடராசா - அல்வாய் மேற்கு - பருத்தித்துறை)

**மேஜர் செந்தூரன்-பிறேம்நாத்** (சிதம்பரப்பிள்ளை சிவரூபன் - துன்னாலை தெற்கு - கரவெட்டி)

**கப்டன் சுதர்சன்** (செல்லத்துரை ஜெயசீலன் - பரப்புக்கடந்தான் வீதி - மன்னார் (திருமலை)

**கப்டன் சத்தியன்** [சிவஞானம் ரமேஸ் -2-ம் யூனிற் வவுனிக்குளம் - மாங்குளம்]

**கப்டன் தமிழ்மறவன்-கல்கத்** (ஆறுமுகம் காண்டீபன் - நட்டாங்கண்டல் - மாங்குளம்]

**கப்டன் முகிலன்-வினோ** [சூரிசிவம் - கல்மடு, பூப்புகார் - வவுனியா)

**கப்டன் கதிர்-கீதன்** (இராமையா பாஸ்கரன் - சிவபுரி - திருகோணமலை]

**கப்டன் மோகனரூபன்-சாந்தன்** [தங்கவேல் ராதாமோகன் - துன்னாலை வடக்கு- கரவெட்டி)

**கப்டன் நகுலன்** [நாகமணி கேதீஸ்வரன் - எழுத்தூர் - மன்னார் [நேரியகுளம்]

**கப்டன் செந்தூரன் புளோமின்** [மரியாம்பிள்ளை கமிலஸ் - சூரியகட்டைகாடு - மன்னார்]

**கப்டன் உதயசீலன்-டெனிஷன்** [கணபதிப்பிள்ளை ஜெகதீஸ்வரன் - முருங்கன்-மன்னார்]

**கப்டன்-பொன்னன்-ஸ்ரீகாந்த்** [நாகலிங்கம் சுரேந்திரன் - சந்திவெளி - மட்டு)

**கப்டன் மருத்துவன்-லுக்காஸ்** [சாமுவேல் செல்வானந்தன் - புதுக்குளம், உயிலங்குளம் - மன்னார்)

**கப்டன் கருணா-சர்மிளன்** (அருள்நேசன் கின்சிலி - அளவக்கை, முருங்கன் - மன்னார்]

**கப்டன் கல்யாணி** [தர்மலிங்கம் ரேணுகாதேவி - கிளிவெட்டி - மூதூர்)

**கப்டன அன்பழகி அபி** (சபாபதி இலட்சுமி - பூனகர், ஈச்சிலம்பற்றை - மூதூர்]

**கப்டன் குயிலி-சுதா** (இராசேந்திரம் இன்பவதனி- பன்குடாவெளி, செங்கலடி - மட்டு)

**கப்டன் செம்பிறை-சௌமி** (வல்லிபுரம் நளினி - சாஸ்திரி கூழாங்குளம் - வவுனியா)

**கப்டன் வினோதன்** [நாகலிங்கம் உதயகுமார் - ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி)

**கப்டன் சேரன்** [நடராஜா சர்வேஸ்வரன் - வண்ணார்பண்ணை (காரைநகர்)

**கப்டன் பிரதீபன்** [கந்தசாமி மகிந்தன் - சாவகச்சேரி]

**லெப்- சசிதரன்** [வேலாயுதம் மகேந்திரம் - செட்டிகுளம் - வவுனியா]

**2-ம் லெப்.சீத்தாலட்சுமி** (சுப்பன் முனியம்மா சின்னச்சாலம்பன்-ஒட்டிசுட்டான்)

**2-ம் லெப். காரணி** (துரைச்சாமி லலிதாதேவி- கோரக்கல்மடு, கிரான்-மட்டு]

**2-ம் லெப் மிதுலா** (கணபதிப்பிள்ளை மாரிமுத்து திகிலிவெட்டை, சந்திவெளி-மட்டு)

**2-ம் லெப். நரேந்தினி** (அப்பாசாமி அன்னலட்சுமி -கணேசபுரம்-கிளிநொச்சி)

**நவம்** [முனீஸ்வரன் தவசீலன்-மகாறம்பைக்குளம்- வவுனியா]

**வீரபாண்டியன்** [கந்தசாமி இந்திரகுமார் - வன்னிவிளாங்குளம்-மாங்குளம்]

**முருகவேல்** [பெருமாள் கண்ணன்-உதயநகர் - கிளிநொச்சி]

**சுரேஸ்குமார்** [கதிரேசு சசிக்குமார் - உதயநகர் - கிளிநொச்சி]

**வெங்கடேஸ்வரன்** [வடிவேல் சிவகுமார்-மந்துவில் கொடிகாமம்]

**கிருட்ணகுமார்** [செல்வராஜா சந்திரகுமார் - மானாங்கானை-வல்வெட்டித்துறை]

**ஜெயமதி** [கணபதிப்பிள்ளை சறோசா-பல்லவராயன்கட்டு. பூநகரி-மன்னார்]

**செவ்வந்தி** [செல்வராசா சகுந்தலாதேவி - கிளிநொச்சி- திருமலை]

**ஜெனார்த்தினி** [சீனிவாசகம் குணவதி - அம்மன் கோயிலடி, கோப்பாய்வடக்கு]

**தட்சாயினி** [சங்கரப்பிள்ளை விக்கினேஸ்வரி-கச்சேரி, நல்லூர் வீதி-யாழ்)

**எழிலருவி** [அருள்தாஸ் புஸ்பமலர் - விநாயகபுரம், நாச்சிக்குடா-மன்னார்]

**திருமலர்** (யோகராசா கமலேஸ்வரி - தச்சடம்பன், மாங்குளம் (திருமலை)

**சுரபி** (முத்துக்குமார் மோகனராணி - 4-ம் வாய்க்கால் - கிளிநொச்சி)

**துவாரகா** (நல்லதம்பி கமலா-சந்திவெளி. மொறக்கொட்டாஞ்சேனை-மட்டு)

**ரமணி** (ஞானப்பிரகாசம் பெர்ணடேற்-சேமக்காலை வீதி-நாவாந்துறை)

**கவிமலர்** (நல்லையா சத்தியகலா - புதுமுறிப்பு - கிளிநொச்சி)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

[சி-10420] **தமிழீழ விடுதலைப் புலிகள்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ...நூலகம்.

## அரச ஒப்பந்தகாரராக சொத்தி உபாலி இருந்தார்

(கொழும்பு)

கொழும்பு பாதாள உலகின் தலைவராக கருதப்படும் சொத்தி உபாலிக்கு திவுலுப்பிட்டியாவில் நடைபெற இருந்த கம்உதாவ நிகழ்ச்சிகளின் வேலைத்திட்டங்களுக்கென 23 இலட்ச ரூபா செலவில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கம் உதாவ நடைபெறவிருந்த மைதானம் திருத்தியமைக்கப்பட முன்னமே இவ் ஒப்பந்த பணம் சொத்தி உபாலிக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னைய அரசு சொத்தி உபாலியுடன் மேற்கொண்ட வேறு ஒப்பந்தங்கள் பற்றியும் பூரண விசாரணைகள் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## சுயமாக திருமணம் செய்யும் வயதெல்லை குறைப்பு

(கொழும்பு)

திருமணத்திற்கு பெற்றோரின் சம்மதம் தேவையற்ற வயதெல்லை 21 இலிருந்து 18 ஆக குறைக்கப்படவுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

18 வயதானவர்கள், வாக்களிக்கத் தகுதிபெற்ற நிலையிலேயே, இவ்வாறான வயதெல்லை குறைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனைவரி நீக்கம்

(கொழும்பு)

கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை மற்றும் முத்திரை வரிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டு விட்டதாக கூட்டுறவுத்துறைஅமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

## 500 கிராமசேவையாளருக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

500 கிராம சேவை அதிகாரிகளுக்கெதிரான புகார்கள் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

கிராமசேவை அதிகாரிகள் உடனடியாக மாவட்ட செயலாளர்களின் கீழ் பணிபுரிவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள 14,600 கிராமசேவை அதிகாரிகள் இப்போது கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5 படை உத்தியோகத்தருக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் கொமாண்டோ படையைச் சேர்ந்த ஐந்து இராணுவ உத்தியோகத்தர்கள், சென்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும். இதற்காக அவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வழங்கப்பட்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக லக்திவ பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட அதிகாரிகளுக்கெதிராக விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் லக்திவ மேலும் தெரிவித்துள்ளது.

## லங்கா சீமெந்து நிறுவனம் இயக்க குழு நியமிப்பு

(கொழும்பு)

... துள்ளதாக கொழும்புத் தின ...

## தோட்டத்துறை தொழிலுக்கு தலைவர் தொழிலாளியின் குடும்பத்திற்கு அல்ல

### பிரதி அமைச்சர் சந்திரசேகரன்

(கொழும்பு)

தோட்டத்துறை தொழிலுக்குத்தான் தலைவரே தவிர தொழிலாளியின் குடும்பத்திற்கு அல்ல. தொழில் செய்யாத நேரங்களில் தொழிலாளி சுதந்திரம் உள்ளவனாக விளங்க வேண்டும், நாட்டிலுள்ள ஏனைய மக்கள் பிரதேச சபைகள் மற்றும் மாகாண சபைகள் மூலம் அனுபவிக்கும் சகல உரிமைகளையும், சலுகைகளையும் மலையக மக்களும் பெற வேண்டும். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

கொத்மலை தேர்தல் தொகுதியிலுள்ள கொண்டகெல தோட்டத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு சார வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; தோட்டத் தொழிலாளர்கள் எதற்கு எடுத்தாலும் தொழிற்சங்கங்களுக்கு பின்னால் ஒடுவது ஒரு கேவலமான விடயமாகும். இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் வருடத்தில் ஒரு தடவையேனும் தொழிற் சங்க அலுவலகத்திற்கு செல்வதில்லை, ஆனால் தோட்டத் தொழிலாளர் சதா காலமும் தொழிற் சங்கங்களின் கட்டுப்பாட்டிற்குள் முடங்கிக் கிடப்பதை நிறுத்தவேண்டும். பழக்கப்பட்டுப் போன வாழ்க்கை முறையில் மாற்றம்-திருப்பம் காண வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணை அருள் மிகு ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலின்வருடாந்த மகோற்சவம் அக்டோபர் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் விசேட அபிஷேகம், பூசை வழிபாடுகளுடன் இடம் பெறும்.

எதிர்வரும் அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும், 13 ஆம் திகதி வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும், 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை திருக் கல்யாணமும் நடைபெறும். (24)

## பரிசளிப்பு விழா

யா/பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணியளவில் யா / பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் நடைபெற உள்ளதாக இவ் வித்தியாலய அதிபர் ஆசிரியர், மாணவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளார்கள்.

சங்கானை கல்விக் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ள உள்ள இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக ...

## புளொட் உறுப்பினர் மீது இனந்தெரியாதோர் சூடு

வவுனியா மாவட்ட புளொட் உறுப்பினரான சாந்தன் என்பவர்மீது சனி இரவு இனந்தெரியாதோர் துப்பாக்கிசூடு நடத்திவிட்டு தப்பியோடிவிட்டனர்.

எனினும் இவர் மயிரிழையில் உயிர்தப்பியதாக தெரிவிக்கப்படுகிறது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. சாந்தன் வவுனியா மாவட்ட புளொட் இராணுவப் பிரிவுத் தலைவர் என்றும் கூறப்படுகிறது.

## மானிய ஆணைக்குழு தலைவர்கள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவில் முக்கிய பதவி நிலை மாற்றங்களை மேற்கொள்ள புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

முக்கியமாக பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பதில் தலைவர் மற்றும் சில பதவி நிலை மாற்றங்களையே மேற்கொள்ள புதிய அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி தற்சமயம் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் பண்டிதரத்தினவின் இடத்திற்கு பேராசிரியர் சிறிவீரவை நியமிக்க புதிய அரசு தீர்மானித்துள்ளது என தெரியவருகின்றது.

மேலும் பதில் தலைவராக பேராசிரியர் வஸ்தியாம்பிள்ளையும் ஏனைய பதவிகளுக்கு பேராசிரியர் கால் குணவர்த்தனா, பேராசிரியர் கானே பொன்சேகா ஆகியோரே புதிதாக நியமிக்கப்படவுள்ள ஏனையோர் ஆவர்.

இருந்தும் இப்பதவி நிலை மாற்றங்கள் இன்னமும் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை என தெரியவருகின்றது. (பா, தி)

## 16 கிராம சேவையாளர்கள் தீவுப்பகுதிக்குச் செல்வர்

(யாழ்ப்பாணம்)

புதிதாக தீவுப்பகுதிகளுக்கு நியமனம் பெற்ற 16 கிராம சேவகர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி அன்று தீவுப்பகுதிகளுக்கு புறப்பட்டுச்சென்று தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர்.

இதுவரைகாலமும் இவர்கள் கிராம சேவகர்களாக தெரிவுசெய்யப்பட்டே இருந்தனர். இவர்கள் எதிர்வரும் 4-ம் திகதி எதிர்வரும் 14 ஆம் திகதி தீவுப்பகுதிகளுக்கு பயணமாகவுள்ளதாக தெரியவருகின்றது.

பருத்தித்துறையில் இருந்து கப்பல் மூலம் புறப்படும் இவர்கள் காங்கேசன் துறை சென்று அங்கிருந்து வேறு ஒரு கப்பல் மூலமாக தீவுப்பகுதிகளுக்கு செல்வார் என தெரியவருகின்றது.

இவர்களுடன் தற்சமயம் இங்கு தங்கியுள்ள தீவுப்பகுதி ...

## மருந்து விலைகளைகுறைக்க சுகாதார அமைச்சர் ஏற்பாடு

(கொழும்பு)

தற்போது அதிகவிலைகளில் விற்கப்படுகின்ற மருந்து வகைகளின் விலைகளைக் குறைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென புதிய அரசு ''ஒசுசல'' விற்பனை நிலையம் மூலம் குறைந்த விலையில் மருந்து வகைகளை விற்பனை செய்வதற்கும் ''ஒசுசல'' விற்பனை நிலையங்களை அதிகரிப்பதற்குமான நடவடிக்கைகளை சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் ஏ. எச் எம் பௌஸி மேற்கொண்டுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் 400 வகையான மருந்தே தேவைப்படுகின்றது ஆனால் ஒரே மருந்தை வெவ்வேறு பெயர்களில் வரவழைத்து அதிகவிலைக்கு விற்பனை செய்வதாக சுகாதார அமைச்சு கண்டுபிடித்துள்ளது.

''ஒசுசல மூலம் தேவைப்படும் 400 வகையான மருந்தை போதிய அளவு இறக்குமதி செய்து குறைந்த விலைகளில் விற்பனை செய்தால் தனியார் பார்மஸிகளில் மருந்து வகைகளின் விலைகள் குறையுமென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேஜர் செல்வம்**

**(சோமு முருகேசு)**

ஐந்தாம் கட்டை, எருக்கலம்பிட்டி, மன்னார்

மலர்வு- 1969-3-18 வீரச்சாவு- 1993-9-29

கண்ணின் மணியாம் நம் தாயக பூமியின்
மண்ணினில் எதிரியை வரவிடோம் என்றுமே
கண்ணினில் விடுதலை நெருப்பினை சுமந்துமே
களத்திலாடிய வீரனே செல்வம் என்றும்
மன்னார் மறவனே உன் பெரும் கீர்த்தியை
வாசல் எங்கும் வரைந்துள்ளாய்.

இவருடன் 29 - 9 - 93 அன்று புலோப்பளைச்சமரில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களை நினைவு கூருவதோடு, இன்று 29/9/94 எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும், மதியபோசனத்திலும் சகபோராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு — அக்கா, அத்தான் மருமக்கள்மார்

## இயக்க குழு நியமிப்பு

(கொழும்பு)

காங்கேசன்துறைலங்காசிமெந்து நிறுவனத்தின் தற்போதைய நிலை பற்றியும், அதனை மீள இயக்குவது பற்றியும் ஆராய்வதற்காக அரசாங்கம் ஓர் குழுவை அமைத்துள்ளதாக கொழும்புத் தினசரி ஒன்று தெரிவித்துள்ளது-

இந்நிறுவனம் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதிலிருந்து செயற்படாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அரச காணிகள் விற்பனை: ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

கடந்த அரசினால், அரசாங்க காணிகள் விற்பனை செய்யப்பட்டது தொடர்பாக பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட ஆணைக்குழு ஒன்று விரைவில் அமைக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற அரசாங்கம், அரசாங்க காணிகளை சட்டபூர்வமான ஆவணங்களின்றி, சந்தைவிலையை விட மிகக் குறைந்த விலைக்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கும், பல்தேசிய நிறுவனங்களுக்கும் விற்பனை செய்துள்ளதாக தெரிய வந்ததைத்தொடர்ந்து முழுமையான விசாரணைகளை நடத்த அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## தந்தை நினைவுநிகழ்ச்சிக்கு அனுரா செல்லவில்லை

(கொழும்பு)

ஹொரகொல்லையில் கடந்த திங்கள் நடைபெற்ற முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டீ பண்டார நாயக்காவின் சிரார்த்த தின வைபவங்களில் அவரது மகனும், ஐக்கிய தேசியக்கட்சி பிரமுகருமான அனுரா பண்டாரநாயக்கா கலந்து கொள்ளவில்லை:

கொழும்பில், அனுரா தங்கியிருந்தும், சிரார்த்ததின வைபவங்களில் கலந்து கொள்ளாததன் பின்னணி பற்றி அரசியல் வட்டாரங்கள் வியப்படைந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'நரோமா' பயணிகளிடம் 'பற்றறி' பறிப்பு

(யாழ் பாணம்)

நரோமா பயணிகள் கொண்டுவந்த ரோச் பற்றறிகள் திருகோணமலை துறைமுகத்தில் வைத்து கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வடக்கே பற்றறிகள் எடுத்துச் செல்வதற்கான தடை நீக்கப்பட்டதாக பத்திரிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சியிலும் வெளியான செய்திகளைத் தொடர்ந்தே தாம் பற்றறிகளை எடுத்து வந்ததாக, பற்றறிகளை கடற்படையிடம் இழந்தவர்கள் தெரிவித்தார்கள்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் தாங்கள் இரண்டு பற்றறிகளைமட்டுமே எடுத்து வந்ததாகவும் ஒருபற்றறியை கூட வடபகுதிக்கு எடுத்துச் செல்ல முடியாதென கடற்படையினர் கூறிய தாகவும் தெரிவித்தார்கள். (சி)

விருந்தினராக கலந்துகொள்ள உள்ள இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாக கா. சந்திரராஜா (வலி மேற்கு பிரதேச செயலர்) சு கணபதிப்பிள்ளை (பிரதிக் கல்விப்பணிப்பாளர் யாழ் மாவட்டம்) அ. தற்பரானந்தன் (சங்கானை கல்விக்கோட்டம் உதவிக் கல்விப்பணிப்பாளர்) சூ. பாப்பா (கடற்புலிப் பிரதேசப்பொறுப்பாளர் வலி மேற்கு) ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள். (17)

## ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக ஒருவரை மகனும் மருமகனும் சேர்ந்து வெட்டியும் அடித்தும் படுகாயத்திற்குள்ளாக்கினர் என தெரிவிக்கப் படுகிறது.

இச்சம்பவம் கடந்த திங்களன்று நுணாவில் பகுதியில் நடந்தது.

இச்சம்பவத்தில் செல்வராசா என்பவரே காயமடைந்தவராவார். இவர் வெட்டுக்காயத்திற்கும், கால், கைகளில் தடி கொண்டும் தாக்கப்பட்டதில் எலும்புகள் முறிந்த நிலையிலும் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

## எரிபொருளுக்கு 13 ஆயிரம் ரூபா

(கொழும்பு)

அமைச்சர்களின் உத்தியோகபூர்வமான வாகனத்திற்கான மாதாந்த எரிபொருள் செலவாக பதின்மூவாயிரம் ரூபா வழங்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## யோகாசன விளக்கம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம் வழங்கும் யோகாசன செய்முறை விளக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரைகாலமும் இவர்கள் கிராம சேவகர்களாக தெரிவுசெய்யப்பட்டே இருந்தனர். இவர்கள் எதிர்வரும் 4-ம் திகதியில் இருந்தே தமது அலுவல்களை பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளனர்.

சுமார் 16 பேர் கொண்ட கிராம சேவையாளர்கள் குழு ...க்கு செல்வார் என தெரியவருகின்றது.

இவர்களுடன் தற்சமயம் இங்கு தங்கியுள்ள தீவுப்பகுதி மேலதிக அரச அதிபர் சண்முகநாதனும் இவர்களுடன் புறப்பட்டுச் செல்வர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (பா) (தி)

## மாகாணசபை அதிகாரங்கள் மத்திய அரசால் பறிப்பு

### மாகாணசபை அதிகாரி விசனம்

(யாழ்ப்பாணம்)

மாகாண சபை அதிகாரங்கள் திட்டமிட்டு மத்திய அரசால் பறிக்கப்படுவதாக மாகாண சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாகாண பொதுச்சபை ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரங்களை மத்திய அரசு பறிக்கின்றது. அண்மையில் நடந்த நிர்வாக சேவை உத்தியோகஸ்தர் நியமனங்கள் நேரடியாக மத்திய அரசே செய்துள்ளது. ஆனால் அவர்களுக்கான இடங்களை மட்டும் மாகாண சபையிடம் விட்டுள்ளது.

மேற்படி நியமனங்கள் மாகாண பொதுச்சபை ஆணைக்குழுவினாலேயே வழங்கப்படவேண்டும், அதை விட்டு விட்டு மத்திய அரசு நியமனங்கள் வழங்குவது மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களை பறிக்கும் செயலாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:-
26. 9. 1975

வீரச்சாவு:-
29. 9. 1993

### லெப். இளமுருகன்
(ஐயாத்துரை அன்பழகன்)

உம்பிரிவால் துயருறும்
தாய், அண்ணன், அக்காமார்,
தம்பி, தங்கை, மைத்துனர்மார்,
மைத்துனிமார், மாமன்மார்,
அத்தைமார், மருமக்கள்,
மகள், உற்றார், உறவினர்.


கனகசபை வீதி,
மானிப்பாய் (9532)

காலநேரம்:

கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு

அக்கா, அத்தான்
மருமக்கள்மார்
(9544)

## 45-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:
04 - 06 - 1942

அன்னியர்
அழிப்பு
16 - 08 - 1994

### திரு வல்லிபுரம் பரராஜசிங்கம்
(ஐயாத்துரை)
(கதிரிப்பாய் அச்சுவேலி)

(16-08-1994பலாலி இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் பலியானார்)

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் பொறுமையின் பொக்கிசமாய்
ஒளிவிளக்காய் பாரினில் உதிர்த்து எமக்கெல்லாம் நல்வழிகாட்டி
அன்பு பாசம் அள்ளி வழங்கி விட்டு இறைவனடி சேர்ந்தீரே ஐயா
எம்மைவிட்டு பிரிந்து மாதம் ஒன்றரை சென்றாலும்
உங்கள் நினைவு என்றென்றும் எம்மோடு நிற்கும்

எம் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்

இன்று 29-9-94 எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் பங்குபற்றி எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி- ஓம் சாந்தி - சாந்தி

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

தற்போதைய முகவரி:
இராச வீதி, அச்சுவேலி.


(9535)

# நிரந்தர நியமனம் கடிதம் வழங்கப்படும்

(நல்லூர்)

பட்டதாரிப் பயிலுனர்களாக கடமை புரிந்து தமது ஒரு வருடச் சேவையை ஆற்றியுள்ள யாழ் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தற்போது கடமைபுரியும் ஆறு பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனக் கடிதங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ் கல்விக் கோட்டத்தில் வழங்கப்பட உள்ளதாக யாழ் கல்விக் கோட்டம் தெரிவித்துள்ளது. [17

## 1ம் ஆண்டு நினைவாக...



பிறப்பு:- 06-09-72

வீரச்சாவு:- 29-9-93

### லெப்டினன்ட் ஈகவரசன் தியாகு

இராசேந்திரம் யோகநாதன் (ராசன்)

(கீரிமலை)

ஆண்டு ஒன்று சென்றாலும் என் அருமை ராசனே
பள்ளிப் பருவத்திலே தமிழீழ விடுதலைக்காய்
வீறு கொண்டு புறப்பட்டாய் வீரமுடன்
புலோப்பளைச் சமரினிலே எதிரியை விரட்டவென
சென்றாய்
வருவாய் என பார்த்திருக்க வீரச்சாவைத்
தழுவினாயோ

29-9-94 இன்று எமது இல்லத்திற்கு வருகை தருமாறு சக போராளிகளை அழைக்கிறோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர்கள்

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

(9543)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



## அறிமுக விழா

அறவழி போராட்டக் குழுவின் அறவழி இலக்கிய பேரவை நடாத்தும் கவிதை அறிமுக விழா சாவகச்சேரி அறவழி பயிலகத்தில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறவழி இலக்கிய பேரவை கேட்டுள்ளது.


பாரதி

சித்தன்கேணி

A/L 95

DAY CLASS

(பரீட்சை எடுத்த மாணவர்கட்கு)

பொருளியல்
- மகேந்திரன்
கணக்கியல்
- SAM
வர்த்தகம்
- பசில்
அளவையியல்
- சர்மா
தமிழ்/இ. நாகரிகம்
- பாலா
இந்துசமயம்
- காரை. எஸ்.கெங்கா

O/L

விஞ்ஞானம்

(இலவச மீட்டல் வினாவிடை வகுப்பு)

ஆசிரியர்-

MR. தேவா

ஆரம்பம்:

04-10 94 (செவ்.)

(சி- 10419)


# சிம்பாப்பேசெல்லும்குழுவில் முரளிதரனுக்கும் இடம்

(கொழும்பு)

சிம்பாப்பே நாட்டுக்கு கிரிக்கட் சுற்றுலாவை மேற்கொள்ளும் இலங்கை அணியில் முத்தையா முரளிதரனுக்கும் இடம் கிடைத்துள்ளது சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் இலங்கை கிரிக்கட் வரலாற்றில் ஆகக் குறைந்த போட்டிகளில் பங்குபற்றி 50 டெஸ்ட் விக்கெட்டுகளை கைப்பற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது எனினும் அண்மையில் நடைபெற்ற சிங்கர் கிண்ண கிரிக்கட் தொடரில் அவர் முழுமையாக பங்குபற்றவில்லை.

ஒரு மாதகாலம் நீடிக்கும் இச் சுற்றுலாவில் மூன்று டெஸ்ட் போட்டிகளும், மூன்று மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கட் போட்டிகள் இடம்பெறவுள்ளன.


## கலந்துரையாடல்

வடஇலங்கை நுண்கலை மன்றத்தினால் நடாத்தப்பட்ட தரம் 4, 5 தேர்வில் சித்தியடைந்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன

இதுகுறித்து நடைபெறவுள்ள வைபவம் பற்றிய ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வரும் ஞாயிற்றுக்கிழமை இந்துமகளிர் கல்லூரியில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது உரியவர்களை இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு இதன் செயலாளர் கேட்டுள்ளார்.

## நீங்காதநினைவலைகள்

10-ம் மாதம் 1-ம்ஆண்டு



லெப்.கேணல் கோதை (பாமா) மேஜர் சுகன்யா

வெள்ளைச் சிறகசைத்து
வண்ண உலகை வலம் வந்து - சுதந்திரவானில்
கள்ளமின்றிப் பறந்து வந்த
காவியப் பறவைகளே!
லெப்.கேணல் பாமா! மேஜர் சுகன்யா!
விடியலின் வரவுக்காய் - நீங்கள்
இசைத்த பாடல்களின்
சுரத்தை மீட்க... ஆயிரமாயிரமாய்
கிளம்பிப்பறப்பர் எமது போராளிகள்
உறுதியிது!
வீரத்தின் விளைநிலங்களே!
உங்கள் வழி தொடர்வோம்.

- போராளிகள்

[9548]

# சிக்கனம் கடைப்பிடிக்க அமைச்சுகளுக்கு அறிவுரை

(கொழும்பு)

அமைச்சுக்களின் வாகன ஒதுக்கீடு, கொள்வனவு எரிபொருள் ஆகியவற்றில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆடம்பர வாகனங்கள்கொள்வனவுசெய்யவும் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை நிதி, திட்டமிடல் இன உறவு அலுவல்கள் தேசிய நல்லிணக்க அமைச்சு சகல அமைச்சின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளதாக தெரியவருகின்றது.

ஒவ்வொரு அமைச்சும் எத்தனை வாகனங்களை யார் யாருக்கு வழங்கலாமென்ற விபரங்களும் எரிபொருள் பற்றிய அளவும் அறிவித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

விலையுயர்ந்த ஆடம்பர வாகனங்களை இறக்குமதி செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்என்றும்ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது.

## உதயத்தின் நினைவலைகள்



### லெப்டினன்ட் வீமா - குயிலி

தங்கராஜா ரவீந்திராதேவி

தாய் மடியில் 29 09-1973

தமிழ் மண் மடியில் 09-07-1992



முதற் பெண் கடற்கரும்புலி

கப்டன்

## அங்கயற்கண்ணி

(புஸ்பகலா துரைசிங்கம்)

[மண்கும்பான் மேற்கு, 5-ம் வட்டாரம், வேலணை]


பிறப்பு: 10-06-1973
வீரச்சாவு: 16-08-1994

விடியலின் வரவுக்காய்
வீறு கொண்டெழுந்த
முதற் பெண் கடற்கரும்புலியே
தாயகக் கடலிலே காவியமானாய்
'காங்கேசன்' துறை முகத்தில்
கடற்படை கப்பல் கருகிப் போக
நீ காற்றாகினாய்
உன் கனல்விழி எம்முன்
உன் கனவு நனவாக
தொடர்வோம் தலைவன் வழி.

29-9-94 இன்று இவரது இல்லத்தில் இடம்பெறும் நினைவு நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்,

மணியர்பதி,
கொக்குவில் மேற்கு.
- குடும்பத்தினர்.
(9541)

## 1-ம் ஆண்டு நினைவு க..



| கோணராசா நிருபா (மஞ்சு) | கோணராசா யோகேஸ்வரி (குழந்தை) | கோணராசா மைதிலி |
|---|---|---|
| அன்னை மடியில் 24-11-84 | அன்னை மடியில் 03-10-54 | அன்னை மடியில் 14-01-88 |
| அநியாய அழிப்பில் 29-9-93 | அநியாய அழிப்பில் 29-9-93 | அநியாய அழிப்பில் 29-9-93 |

### திதி 18 9.94

எங்கள் மழலைச்செல்வங்களே மைதிலி, மஞ்சு,
பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்தினோம்
உம் பிறந்த நாளன்று.
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டிக் கண்ணீர்ப் பூக்களால்
அஞ்சலிக்கின்றோம் உமை இழந்த நாளின்று-

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே அம்மா, அன்பைச் சொரிந்து
அறிவூட்டி, பண்போடு வளர்த்து ஆளாக்கு முன்னே - பாதியிலே
எம்மை விட்டு ஒரு வார்த்தை சொல்லாமல் பறந்து சென்று விட்டீர்களே
அம்மா உங்கள் அன்பைத் தேடித் தவிக்கின்றோம் பாலகர் நாம்,

உங்கள் பிரிவால் வாடும்-
அன்புக் கணவர், அருமைப் பிள்ளைகள்
உற்றார், உறவினர், நண்பர்கள்-

நவக்கிரி,
புத்தூர்-
(9549)

தங்கராஜா ரவீந்திராதேவி


தாய் மடியில் 29 09-1973
தமிழ் மண் மடியில் 09-07-1992

நீ இந்த மண்ணில் பூத்து
இருபத்தியொரு புரட்டாதிகள்
வந்து போயின,
நாம் நேரில் வாழ்த்துச்சொல்ல
நீயில்லை!
நேற்று வந்த கார்முகில்
பூத்தூவி மழை சொரிந்தது.
நீர்திரண்ட கண்களை
காற்று உலர்த்திய போது
நீ சட்டத்தில் சிரித்தபடி......
நாளை நாம் பகையோட்டி
ஈழம் மலரும்
அப்போது உன் கனவு
மலர்ந்து மணம் வீசும்

- குடும்பத்தினர்

(9545)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 10-06 1936

மறைவு: 30-08 1994

### மாணிக்கராசா வேலுசிங்கம்

அன்னாரின் இல்லத்தில் நாளை நடைபெற இருக்கும் அந்தியேட்டிகிரியைகளில் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அலுக்கை, அளவெட்டி
- குடும்பத்தினர்
(9540)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

### சிந்தனைக்கு..

உயர்ந்த மலை இருக்கும் இடத்தில் படுபாதாளப் பள்ளத்தாக்கும் இருக்கும்; அதிகலாபம் கிடைக்கும் இடத்தில் அதிக நட்டம் ஏற்படும் ஆபத்தும் உண்டு-

- திபெத் பழமொழி

ஈழநாதம்

41, ஐகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபாலிப்பெட்டி எண்-03

## ஏற்புடைய காரணம் எதுவுமில்லை

பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கம் மேற்கொண்ட விலைக்குறைப்புத் தொடர்பான நடவடிக்கைகள் தென்னிலங்கையில் சில அத்தியாவசியப் பொருள்களின் விலையை வீழ்ச்சியடையச் செய்துள்ளன; அரசாங்கம் பதவியேற்று சுமார் ஒரு வார காலத்திற்குள் கொண்டு வரப்பட்ட விலைக்குறைப்பு உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவும் பட்டது.

ஆனால் இவ்விலைக் குறைப்பானது இன்னும், அதாவது ஒரு மாத காலம் ஆகியும் வடபகுதியை முழுமையாக வந்தடையவில்லை என்பது வேதனையளிக்கும் அம்சமாகும், இதற்கு வடபகுதி மீதான பொருளாதாரத் தடையும், போக்குவரத்து வசதிக் குறைவும் காரணம் என விளக்கம் கூற விற்பனையாளர்கள் முற்பட்டாலும், இன்றைய அரசியற் சூழலும், இதுவரை கிடைக்கப் பெற்ற கால அவகாசமும், இக்காரணங்களை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியுமா? என்ற கேள்வியையே எழவைக்கின்றன.

முன்னைய ஐ.தே.க அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலத்தை விட தற்பொழுது மிகச் சிறிய அளவினதேனும் பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டுள்ளது/ தளர்வு ஏற்பட்டுள்ளது என்பது எவரும் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்; ஆகையினால் பொருள்கள் வரவு சற்று அதிகமாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

இதேவேளை போக்குவரத்துத் தடையில் தளர்வு ஏற்படாமையால் பொருள்கள் தடை தளர்த்தப்பட்டும் அவை வந்தடைவதற்கான நேரமோ, தாமதமோ குறையவில்லை என்பது கருத்திற் கொள்ளப்படக் கூடியது தான் ஆயினும், மறுவளமாக போக்குவரத்தில் மண்ணெண்ணெயில் ஏற்பட்ட வீழ்ச்சி ஓரளவு கருத்திற் கொள்ளக் கூடியதே ஆகும்.

இதேசமயம் பொருள்கள் விலை வீழ்ச்சி கொண்டு வரப்பட்டு ஒரு மாத காலம் கடந்து விட்டது என்பது முக்கியமானதாகும்; இக்கால இடைவெளி வழங்கப்பட்டதினால் வியாபாரிகளிடம் முன்னர் அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் கையிருப்பில் இருப்பதாகவும், அதனால் விலைக்குறைப்பு செய்ய முடியாத நிலை இருப்பதாகவும், முன் வைக்கப்படும் வாதம் எந்தளவிற்குப் பொருத்தமானதும், நியாயமானதுமாகும்?

அத்தோடு கடந்த ஒரு மாத காலத்தில், சில விலை

## புலிகளின் உறுப்பினராக் நடித்த போலிஸ் சார்ஜன்ட் பதவி இழப்பு

(புத்தளம்)

விடுதலைப்புலிகளின் உறுப்பினர் போல நடித்த புலனாய்வு பிரிவு பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் பதவி விலக்கப்பட்டார் புத்தளம் பகுதியில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது; பஸ்ஸிக்காக காத்திருந்த திவயின பத்திரிகை

### புத்தளத்தில் சம்பவம்

நிருபரான சரத் கட்டுகம்பொலை சாதாரண உடையில் வந்த ஒருவர் அணுகி, தான் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் எனவும், முக்கிய பிரமுகர்கள் குறித்து தவறான தகவல்களை அனுப்ப வேண்டாம் எனவும் கூறி மிரட்டியுள்ளார். தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டால் அவர் சுடப்படுவார் எனவும் தெரிவித்துள்ளார். இதனைத்தொடர்ந்து உசாரான சரத்கட்டுகம்பொல புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் இல்யாசுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கோரினார். ஸ்தலத்திற்கு விரைந்த இல்லாசின் மெய்ப்பாதுகாப்பு பிரிவின் உதவியுடன் சந்தேகநபர் மடக்கி பிடிக்கப்பட்டு புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அப்போது தான் அவர் மாவட்ட புலனாய்வு பிரிவின் பொலிஸ் சார்ஜண்ட் என இனம் காணப்பட்டார் எனினும் அவர் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

## தோட்டத்துறையில் மாற்றம் இருவாரத்தில்குழுநியமனம்

### பிரதமர் வாக்குறுதி

(கொழும்பு)

பெருந் தோட்டத்துறையில் மாற்றங்கள் ஏற்படுத்துவது தொடர்பாக ஆராய இருவாரத்துக்குள் ஒரு குழு அமைக்கப்படும் இக்குழு தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகள், கம்பனி நிர்வாக முறைமை என்டன தொடர்பாக அராயும் இவ்வாறு பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் எம். எஸ். செல்லச்சாமியிடம் உறுதி அளித்துள்ளார்.

பிரதமரை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசிய திரு. செல்லச்சாமி, இச்சந்திப்பு பற்றி மேலும் கூறுகையில், கம்பனி நிர்வாக முறையின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் மோசமாக நடத்தப்படுவது பற்றியும், தொழிலாளர்களின் குடியிருப்பு பிரச்சினைகள் குறித்தும், காரணமேதுமின்றி சிறையில் வாடும் மலையக இளைஞர்கள் பற்றியும், பிரதமருக்கு சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு பதிலளித்த பிரதமர், தேர்தல் வாக்குறுதியின்படி அரசாங்கம் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளும் இருவாரங்களுக்குள் இதற்கான குழு நியமிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## விளக்கமறியல் கைதிகள் ஆயுதபாணிகளால் விடுவிப்பு

### கொழும்பு நகரில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை நீதிமன்றத்திலிருந்து மகர சிறைச்சாலை அதிகாரிகளால் மகர சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட விளக்க மறியல் கைதிகள் ஆறு பேர் கடந்த வியாழனன்று பிற்பகலில் கொழும்பு மக்கலம் வீதியில் வைத்து ஆயுத பாணிகளான மூன்று இனம் தெரியாத நபர்களால் விடுவிக்கப்பட்டு கடத்தி செல்லப்பட்டு இருக்கின்றனர்.

சந்தேக நபர்களை ஏற்றி வந்த சிறைச்சாலை வாகனம் போக்குவரத்து நெருக்கடியில் அகப்பட்ட வேளையில் திடீரென கைக்குண்டுகள் பிஸ்டல் சகிதம் வாகனத்துக்கு முன்னே பாய்ந்த மூவர் சிறைச்சாலை அதிகாரிகளை பயமுறுத்திவிட்டு கைதிகளை விடுவித்து அருகில் வந்த கார் ஒன்றை மறித்து அதில்ஏற்றிச் சென்று விட்டனர் எனக் கூறப்படுகிறது.

## ஆசிரியர் சம்பளஉயர்வுபற்றி அக் 6-ல் அறிவிப்பு வரலாம்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது பற்றி எதிர்வரும் அக்டோபர் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச ஆசிரியர் தினத்தன்று அறிவிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

அத்துலத் முதலி கல்வியமைச்சராக இருந்த போது 1990 அக்டோபர்6 ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்களுக்கான சம்பறியாகவே இருந்து வந்தது.

பொதுத் தேர்தலிற்கு முன்னர் கல்வியமைச்சு ஆசிரியர் சேவையை ஏற்படுத்த சம்பள அதிகரிப்புப்பற்றி அறிவித்தும் அது முறையாக மேற்கொள்ளப்படாதினால் அமுலுக்கு வரவில்லை புதிய உயர்கல்வி கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வை வழங்குவது குறித்து இப்போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடையன்

## அன்பளிப்பு

சுவாமி விவேகானந்தரின் உலக சமய பெருவிழாவையொட்டி பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் புலோலி பொது நூலகத்திற்கு சமய நூல்களை அன்பளிப்பு செய்யவுள்ளது. அத்துடன் புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரியில் பயிலும் பின் தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதலும் ஏழை மாணவர்களுக்கு அறக்கொடைத் திட்டத்தின் கீழான சேமிப்புக் கணக்கும் திறக்கப்படுதலும் இடம் பெறவுள்ளன. (25)

## படுகாயமுற்றார்

(யாழ்ப்பாணம்)

மயிலங்காடு சுன்னாகத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ள முயன்ற வயோதிபர் ஒருவர் தவறி கிணற்றினுள் வீழ்ந்ததில் படுகாயத்திற்கு இலக்காகியுள்ளார்.

வேலன் முருகன் (வயது 56) என்பவரே இவ்வாறு படுகாயங்களுக்கு இலக்கானவராவார்.

இவரது கால் எலும்பு முறிந்ததுடன் தலை மற்றும் உடலின் பல பகுதிகள் காயத்திற்குள்ளாகியுள்ளன. (சி)

## மிதிவெடியில் சிக்கியவர் கையில் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை அண்டிய பகுதிகளில் தமது மாடுகளை மேய்த்துக் கொண்டு நின்றவர் மிதிவெடியில் சிக்கியதில் கையில் படுகாயமடைந்தார்.

நவக்கிரி புத்தூரை சேர்நத சுப்பையா சின்னத்துரை [வயது 50] என்பவரே மிதிவெடி வெடித்ததில் காயமடைந்தவராவார்.

இவர் தனது மாடுகளை மேய விட்டுவிட்டு கையில் இருந்த தடியை ஊன்றியபடி நடந்தபோது தடி ஊன்றிய இடத்தில் இருந்த மிதிவெடி வெடித்தது. இதனால் மிதிவெடியின் சிதறல்கள் கையை தாக்கியதில் படுகாயம் அடைந்துள்ளார். (சி)

## குச்சவெளியில் குடியேற தமிழர்களுக்கு வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி, நிலாவெளி புல்மோட்டை ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்களை மீண்டும் அங்கு சென்று குடியேறுமாறு அரசு வற்புறுத்துவதாக அங்கிருந்து கிடைக்கும்செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி இடங்களில் இருந்து வெளியேறிய தமிழ் மக்களை அங்கு மீண்டும் சென்று குடியேறுமாறும் தாங்கள் பாதுகாப்பு தருவதாகவும் அரசு கேட்டுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முஸ்லிம்களும் சிங்களவரும் அதிகமாக உள்ள அப்பிரதேசங்களில் பாதுகாப்பின்றி அகதிகளாக வெளியேறிய தமிழ் மக்கள் அரசு தரும் வாக்குறுதியை நம்பி அங்குசென்று குடியேற மறுத்து விட்டதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (சி)

## லொறியில் வரும்பற்றறிக்கு ராணுவம் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் ஊடாக பொருள்களுடன் வரும் லொறி பற்றறிகள் தொடர்ந்தும் இராணுவத்தால் தடுக்கப்படுவதால் லொறிச் சாரதிகள் விசனமடைந்துள்ளனர்.

பற்றிகள் வடக்கேகொண்டு செல்லத்தடை இருந்த காலத்தில் தாண்டிகுளத்தில் வைத்து லொறி பற்றறிகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு இராணுவத்தால் ஒரு அட்டை கொடுக்கப்பட்டு வந்தது. இந்த அட்டையை திரும்பிச் செல்லும்போது இராணுவத்தினரிடம் கொடுத்து பற்றறியை மீளப்பெறும் நடைமுறை ஒன்று இருந்து வந்தது தெரிந்ததே.

தற்போது பென்ரோச்பற்றறிகள் தவிர்ந்த ஏனைய பற்றறிகளை வடக்கே எடுத்துச் செல்ல தடை நீக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ள போதிலும் லொறிகளில் உள்ள பற்றறியை கூட முன்னர் போன்றே இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (சி)

## யாழ். மாணவர்களின் பார்வைதிறன்குறைகிறதாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாணவர்களின் கண் பார்வைத்திறன் மிகக் குறைந்திருப்பதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சரியான வெளிச்சமின்றி, மாணவர்கள் கல்வி கற்பதனாலும், மண்ணெண்ணெய் விளக்குகளின் புகையினாலும் இம்மாணவர்களின் கண் பார்வைகளில் குறைபாடு தோன்றியிருப்பதாக தெரியவருகிறது.

பெருமளவிலான மாணவர்கள் இது குறித்தான சிகிச்சைகளை யாழ் மருத்துவமனைகளில் பெற்று வருவதையும் அவ் அறிக்கைகள் சுட்டிக் காட்டியுள்ளன.

## அவசியதேவை நிறைவேற்ற அரசிடம் வேண்டுகோள்

குறைப்புச் செய்யப்பட்ட பொருள்களுக்குச் சந்தையில் தட்டுப்பாடு நிலவியதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கோதுமை மாவிற்கு நிலவிய தட்டுப்பாடு சுட்டிக் காட்டக் கூடியது. இந்நிலையில் இன்று பெருமளவு வியாபார ஸ்தாபனங்களால் பிரஸ்தாபிக்கப்படும் கையிருப்பு என்பது ஏன் அப்பொழுது-பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய காலத்தில் - விற்பனைவிற்கு விடப்படவில்லை? அவ்வாறு செய்யாது தற்பொழுது கையிருப்பு பற்றிப் பேசுவதில் நியாயம் இருப்பதாக இல்லை.

இதைவிட இரண்டாம் கட்ட ஈழப்போர் உச்ச நிலையிலும் பொருளாதாரத் தடை மிக மிக இறுக்கமாக இருந்த காலத்திலும் உயர்த்தப்பட்ட பல பொருள்களின் விலை குறிப்பாக உணவுப் பண்டங்களின் விலைகளில் எந்த வித மாற்றமும் ஏற்படாமல் இருப்பது கவலைக்குரியது மட்டுமல்ல, கண்டனத்திற்கும் உரியதாகும். எடுத்துக்காட்டாக 70 ரூபா வெளிச் சந்தையில் சீனி விற்கும் பொழுது 5-00 ரூபாவாக உயர்த்தப்பட்ட பால் தேநீரின் விலை, சீனியின் விலை சரி அரைவாசியாக வீழ்ச்சி கண்டுள்ள காலங்களிலும் அதே நிலை பேணப்படுவதேன்? இதே போன்றதொரு நிலையே கோதுமைப்பண்டங்களிலும் காணப்படுகின்றமை சுட்டிக் காட்டக் கூடியதாகும்.

இவற்றை அவதானிக்கும் போது தனியார் வியாபார நிலையங்களாக இருப்பினும் சரி, கூட்டுறவுச் சங்கங்களாக இருப்பினும் சரி, தமது லாப நோக்கையே முழுமையாகக் கொண்டு செயற்படுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது. வானொலி மூலமோ, தொலைக்காட்சி மூலமோ வரும் விலை அதிகரிப்பை உடனோ அன்றி ஒரு சில தினங்களின் பின்போ-இவ் இடைக்காலங்களில் எவையும் விற்பனைக்கு விடப்படுவதில்லை- விலையதிகரிப்பாகச் செய்யும் இவ்வர்த்தக நிறுவனங்கள், விலைக்குறைப்புச் செய்து ஒரு மாதமாகியும் விலைக் குறைப்புச் செய்யப் பின் நிற்பது பெரும் அபத்தமானதாகும்.

மேலும் விலை ஏற்றம் இடம்பெறும் போதும், விலையேற்றம் நிகழும் என எதிர்பார்க்கப்படும் போதும் தமது கையிருப்பை வெளிக்காட்டாதது மட்டுமல்ல தம்மிடம் அப் பொருள்கள் மிகச் சிறிய அளவிலோ அன்றி முற்றாகவோ இல்லை எனச் சாதிக்கும் நிறுவனங்கள் தற்பொழுது விலைக்குறைப்பின் போது மாதக் கணக்காகிய பின்பும் கையிருப்பு பற்றிப் பேசிக் கொண்டிருப்பது அவர்களின் லாபமீட்டும் குறுகிய நோக்கையே காட்டுவதாகவுள்ளது.

இந்நிலையானது உடனடியாக முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும். விலைக்குறைப்பின் பயனை மக்கள் பெற ஏற்ற நடவடிக்கையை இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் விரைந்து செய்ய வேண்டும்.

---

பள அதிகரிப்புப் பற்றி அறிவிப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது அதற்குள் அவர் அமைச்சர் பதவியில் இருந்து நீங்கியதால் இது சாத்தியமாகவில்லை. இதிலிருந்து ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு இழு

பேச்சுவார்த்தை நடத்திவருவதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

புதிய சம்பள விகிதம் கணிசமான அதிகரிப்பாக இருக்கும் என அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

பற்களில் இருந்துதான்

---

# சடலங்களை இனங்காண வேண்டிய நிலைஇருக்கிறது

## சட்ட வைத்திய அதிகாரி

(கொழும்பு)

சூரியகந்த பகுதியில் தேண்டி எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளில் காணப்படும் பற்களைக் கொண்டே சடலங்களை இனங்காண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு சட்டவைத்திய அதிகாரி எல். பி. டி. அல்விஸ், எம்பிலிப்பிட்டிய நீதிபதி பி. ரணசிங்கவிடம் சமர்ப்பித்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்; கடந்த ஜனவரி மாதத்தில் சூரியகந்தவில் தோண்டப்பட்ட புதைகுழிகளிலிருந்து 18-45வயதுக்குட்பட்ட 21 ஆண்களின் எலும்புக்கூடுகள் காணப்பட்டன. எலும்புத் துண்டுகள் மற்றும் பொருட்கள் அடங்கிய 20 பசளைப்பைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. மார்பு மற்றும் வயிற்றுக்கு மேலான பகுதிகளில் சேதமடைந்த சடலங்கள் ஆறு பசளைப்பைகளில் காணப்பட்டன. ஒரு அங்குலம் முதல் மூன்று அங்குலம் வரை நீளமான தலைமுடிகள் மூன்று பைகளில் காணப்பட்டன. சேதமடையாத 12 மண்டை ஓடுகள், சிதைந்து போன 28 மண்டை ஓடுகள், 13 இடுப்பு எலும்புகள், கீழ்த் தொடை எலும்பு ஒன்று, சமுத்தின் முதலாவது எலும்புகள் ஆறு, கழுத்தின் இரண்டாவது எலும்புகள் 6 மற்றும் முந்நூறு எலும்புகள், சிறிய பாத எலும்புகள், மற்றும் பல உறுப்புகளின் எலும்புகள் 34 என்பன கண்டு பிடிக்கப்பட்டன எனவும் தெரிவித்துள்ளார்.

# வடபகுதி நோக்கி வந்தவர் வவுனியாவில் திடீர் மரணம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்துவடபகுதி நோக்கி வந்த பயணி ஒருவர் தாண்டிக்குளத்தில் திடீரென சுகவீனத்திற்கு உள்ளாகியதை தொடர்ந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு மரணமாகியுள்ளார்.

கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் கோப்பாய் வடக்கு சிறுப்பிட்டி வாசியான ஐயாத்துரை இராமநாதன் என்பவரே மரணமானதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அவரது சடலம் வவுனியா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது

---

# திருட்டு

(குருநகர்)

குருநகர் பகுதிகளில் திருட்டுக்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோழிகள், தாராக்கள் மற்றும் கால்நடைகள் விஷமிகளால் களவாடப்படுவதாக புகார்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில தினங்களுக்குள் குருநகர், புதுமைமாதா கிழக்கு வீதியில் வைத்து பட்டப் பகலில் பொன்னுத்துரை கஸ்பார் என்பவருக்குச் சொந்தமான நான்கு தாராக்கள் திருட்டுப் போயுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

(21)

# சிரித்திரன் வெளிவந்துள்ளது

[யாழ்ப்பாணம்]

சிரித்திரன் இதழின் ஆடி - ஆவணி இதழ் வெளிவந்துள்ளது அதிமதுரம், நிலைக் கண்ணாடி, இரத்த தானம் அவசியம், மகுடி பதில்கள், கறுப்புச் சூரியன் நெல்சன் மண்டேலா போன்ற பல அம்சங்களையும் தாங்கி இவ் இதழ் வெளிவந்துள்ளது.

# வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி வீதி புனித சந்தான மாதா கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் மாலை விசேட திருப்பலி பூசைகள் ஆராதனைகள் இடம்பெறும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் பின்னர் புனித சந்தான மாதா தேரில் ஆரோகணித்துவீதிவலம் வருதல் நிகழ்வும் நடைபெறும்.

(24)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுத்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிலுள்ள அகதி மக்களின் அத்தியாவசியதேவைகளை நிறைவேற்ற உதவுமாறு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரிற்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக தெரிய வருகிறது.

யாழ் குடாநாட்டு அகதி முகாம்களிலுள்ள மக்களிற்கு மலசலகூட வசதிகளை அமைப்பதற்கும் மழை காலம் வருவதால் குடிசைகளை வேய்ந்து கொடுப்பதற்கும் அம்மக்களிற்கு வழங்கும் பொருள்களை கொழும்பில் இருந்து கப்பல் கட்டணம் இன்றி கொண்டு வருவதற்கும் உதவுமாறு வேண்டுகோள் விடுக்க உள்ளதாக தெரியவருகிறது.

மேலும் அகதி முகாம்களை பராமரிப்பதில் பெரும் பங்கை புனர்வாழ்வு அமைச்சு ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் புனர்வாழ்வு புனரமைப்பு கப்பல் துறை அமைச்சர் அஷ்ரப் இடம் கேட்டுக் கொள்ள உள்ளதாக தெரிய வருகிறது.

(88)

# பரீட்சைக்கான ஆவணங்கள் எடுத்துவரப்பட்டன

எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ள சிற்றூழியர் பதவி உயர்ச்சிப் பரீட்சை, அரச, மாகாண எழுதுவினைஞர் வகுப்பு 11 'அ'' பிரிவுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை ஆகியவைகளை நடத்துவதற்குத் தேவையான முக்கிய ஆவணங்கள் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்திலிருந்து யாழ் கல்வித்திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் இதனால் இப்பரீட்சைகள் இங்கு நடைபெற உள்ளதாகவும் யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ஆங்கில தினம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கோட்டமட்ட 'ஆங்கில தினம்' போட்டிகள் நேற்றுக்காலை தொடக்கம் சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெற்றன.

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

## வியாழன் இரவு 29-09-1994

8-01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
8.10 - சித்தமருத்துவம் குறிப்புகள்
8 20 - உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் நீர்பாய்ச்சப் பயன்படும் எரிவாயு குறுநாடகம்
8 30 - செய்திகள்
8.40 - ஏட்டிலிருந்து இயற்கை சமுதாயம் என்ற நூலிலிருந்து 'அரசரும் முதலாளிகளும்' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
8.50 - மலரும் மொட்டுக்கள்

## வெள்ளி காலை 30-09-1994

7.02 - மாவீரவணக்கம்
7 15 - மணியாரம்
7.30 - செய்திகள்
7.35 - பத்திரிகைச் செய்திகள்
7.40 - தாயகப் பாடல்கள் என்பன இடம்பெறும்

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்



## வெளிச்சம் புரட்டாதி இதழ் நாளை வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழின் புரட்டாதி மாத இதழ் நாளை வெள்ளிக்கிழமை வெளிவருகிறது. இந்த இதழில் தியாகி திலீபன் பற்றிய தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய செய்தியும், சீனக்கலாசார புரட்சி பற்றி புதிய நோக்கில் பிரம்மஞானி எழுதிய 'காட்டு அன்னங்கள்' என்ற கட்டுரையும், மாலிகாவின் முன்பக்கக் கவிதையும் இடம்பெறுகின்றன.

இந்த இதழ் வெளிச்சத்தின் இருபத்தொன்பதாவது இதழாகும். அடுத்த இதழ் கவிதைச் சிறப்பிதழாக வெளிவரவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இரு கல்வி ஆண்டு மாணவர்களையும் ஒன்றாக அனுமதிப்பது பற்றி ஆராய்வு

### கல்வி உயர் கல்வி பிரதி அமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக் கழக அனுமதிக்காக காத்திருக்கும் 1992, 93-ம் ஆண்டு மாணவர்களை ஒரே தடவையில் அனுமதிப்பது தொடர்பாக இன்று ஆராயப்போவதாக கல்வி, உயர்கல்வி பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலா தெரிவித்துள்ளார்.

இதனால் ஏற்படக் கூடிய இட நெருக்கடிகள் குறித்து அனைத்துப்பல்கலைக் கழகங்களினதும் உபவேந்தர்களுடனும் ஆராயப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் எக்காரணம் கொண்டும் கல்வி ஆண்டுகளில் தாமதம் ஏற்பட அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி வேட்பாளராக மங்கையற்கரசி போட்டி?

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் போட்டியிடவுள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது லண்டனில் ஓய்வெடுத்துக்கொண்டு இருக்கும் அவர் அடுத்த வாரம் கொழும்பு திரும்பவுள்ளதாக எதிர்பார்க்கப்படுவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

இவரை ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நியமிக்கலாமா என்பது குறித்து கொழும்பு தமிழ்க் குழுக்கள் ஆராய்ந்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## கடற் கரும்புலிகளின் ஊர்தி செல்லும் பாதைகள்

கற்பிட்டி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் கப்பலைத் தகர்த்து மூழ்கடித்து, வீரகாவியம் படைத்த கரும்புலிகளின் உருவப்படம் தாங்கிய ஊர்திகள் இன்று வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய கோட்டங்களில் தனித்தனியாக பவனியாக எடுத்துச்செல்லப் படவுள்ளன. இக் கடற்கரும்புலி மாவீரர்களுக்கு, மக்கள் தங்கள் அஞ்சலியைச் செலுத்துவர்.

வடமராட்சிக் கோட்டத்தில் ஊர்திப் பவனி காலை 9மணிக்கு கிராமக்கோட்டுச் சந்தியில் ஆரம்பமாகும். தன்னாலை தாமரைக் குளத்தடி, நெல்லியடிச் சந்தி, இமையாணன், உடுப்பிட்டிச் சந்தி, தொண்டமனாறு, காட்டுப் புலம்பிடிச் சங்கத்தடி, வல்வைச் சந்தி வழியாக தீருவிலில் ஊர்தி பவனி முடிவுற்று, மாலை பொதுக்கூட்டம் நடைபெறும். பவனி வரும் இடங்களில் கிராமக் கோட்டுச் சந்தியில் காலை 9 மணிக்கும், நெல்லியடிச் சந்தியில் காலை 11 மணிக்கும், நினைவுரைகள் இடம்பெறும்,

வலிகாமம் கோட்டத்தில் 7.30 மணிக்கு சுன்னாகம் சந்தியில் ஆரம்பமாகும் ஊர்திப் பவனி, சுன்னாகம், புத்தூர் வீதி வழியாக, புன்னாலைக்கட்டுவன் சந்தி, பலாலி வீதி வழியாக ஊரெழு, உரும்பிராய்சந்தி, கோண்டாவில் சந்தி, திருநெல்வேலிச் சந்தி, கந்தர்மடம் சந்தி, ஆரியகுளம் சந்தி, மத்திய பேருந்து நிலையம், அருச்சுனா வீதி, ராசாவின் தோட்டம் வீதி, மருத்துவமனை வீதி, கண்டிவீதி, யாழ். செயலகச் சந்தி, கச்சேரி - நல்லூர் வீதி, கேணல் கிட்டு சிறுவர் பூங்காச் சந்தி, கல்வியங்காட்டுச் சந்தி, பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி, கோப்பாய் சந்தி, நீர்வேலி சந்தி, சிறுப்பிட்டிச் சந்தி, புத்தூர்ச் சந்தி, ஆவரங்கால் ஊடாக, அச்சுவேலி பஸ்நிலையம் வரை ஊர்தி பவனி நடைபெறும் பின்னர் பருத்தித்துறை வீதி, நெல்லியடி மூத்தவிநாயகர் கோவிலடியில் இறுதிக் கூட்டம் நடைபெற்று ஊர்தி ஊர்வலம் மாலை 4.30 மணிக்கு நிறைவுறும்.

ஊர்தி பவனி வரும் இடங்களில் 8 மணிக்கு சுன்னாகம் சந்தியிலும், 8.45 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் சந்தியிலும், 9 20 மணிக்கு உரும்பிராய் சந்தியிலும், 10.15 மணிக்கு திருநெல்வேலிச் சந்தியிலும், 11 மணிக்கு, ஆரியகுளம் மத்திய பேருந்து நிலையத்திலும், 11.35 மணிக்கு யாழ். செயலகச் சந்தியிலும், 12.15 மணிக்கு கல்வியங்காட்டுச் சந்தியிலும், 12.50 மணிக்கு கோப்பாய்ச் சந்தியிலும், 1.20 மணிக்கு நீர்வேலிச் சந்தியிலும், 1.55 மணிக்கு புத்தூர் சந்தியிலும், 2.30 மணிக்கு ஆவரங்கால் சந்தியிலும் நினைவுரைகள் இடம்பெறும்.

## யுத்தத்தினால் பயனில்லை நாடு முழுவதுமே பற்றி எரிகிறது

### ஐ.தே.கவின் தவறுகளை மன்னிக்க கோருகிறார் காமினி

(கொழும்பு)

வடக்கின் யுத்தத்தினால் எவரும் வெற்றியையோ அன்றி தோல்வியையோ காணப்போவதில்லை. வட பகுதி யுத்தத்தினால் முழு இலங்கையும்பற்றிஎரிகின்றது. ஐ.தே.கவினால் தவறுகள் ஏற்பட்டிருந்தால் மக்கள் மன்னிக்க வேண்டும் இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்தள்ளார்.

ஹிங்குராகொடவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.தே.க. மக்களிடமிருந்து விலகியிருந்தமை கடந்த மூன்றாண்டு காலத்தினுள் புலப்பட்டது, சூரியன், சந்திரன் இருக்கும் வரை ஐ.தே.க ஆட்சியில் இருக்கும் என்று அதிகாரத்திலிருந்த அமைச்சர்கள்எண்ணியிருந்தனர். இன்று அது பொய்த்து விட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கு கிராமங்கள் சுற்றிவளைப்பு பெண்கள் உட்பட 104 பேர் கைது

(மட்டக்களப்பு)

களுவங்கேணி, ஐயங்கேணி, புன்னக்குடா பகுதிகளை நேற்று முன்தினம் அதிகாலை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் பெண்கள் உட்பட நூறுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களை கைது செய்தனர்.

இவர்களில் 61 பேர் ஆண்கள் 43 பேர் பெண்கள் ஆவர். இவர்களைக் கைது செய்த இராணுவத்தினர் விசாரணைக்கென கூறி முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். இதுவரை இவர்கள் விடுவிக்கப்படவில்லை,

## கடற்படைச்

...ளின் உதவியினால் நேற்று அதிகாலை 1-15 மணியளவில் யாழ்- போதனா மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்- (சி), (88)

## டீசல், மண்ணெய் விலை குறைப்பு அமுல்

டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் நேற்று நள்ளிரவு தொடக்கம் சிறிலங்காவில் குறைக்கப்பட்டுள்ளன.

1 லீற்றர் டீசலின் விலை ஒரு ருபாவாலும் அதாவது 12 ரூபா 40 சதமாக விற்கப்பட்ட 1 லீற்றர் டீசல் 11ரூபா 40 சதமாக விற்கப்படும்.

1 லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 2 ரூபா 30 சதத்தினால் குறைக்கப்படவுள்ளது. தற்போது 11 ரூபா 80 சதத்துக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் 9 ரூபா 50 சதத்துக்கு வழங்கப்படும். இந்த விலைக் குறைப்பினால் அரசாங்கம் 129 கோடி ரூபாவை இழக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்தேவி

...னும் பெயரில் ஆனையிறவு இயக்கச்சி முகாமிலிருந்து புலோப்பளை- அல்லிப்பளைப் பகுதியில் முன்னேறிய சிறிலங்காவின் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினரை துணிகரமாக இடைமறித்து எதிர்த்து உக்கிரமாகத் தாக்கி அவர்களின் யுத்த டாங்கிகளைத் தகர்த்து பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றி நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்று வரலாற்றுச் சாதனை படைத்த புலோப்பளை - அல்லிப்பளை சமரின் 1-ம் ஆண்டு நினைவு நாளும் வரலாற்றுச் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 82 மாவீரர்களின் நினைவாக புலோப்பளை - அல்லிப்பளையில் சிறிலங்கா இராணுவத்தை இடைமறித்து தாக்கிய இடத்தில் நினைவுக்கல் நாட்டலும், இன்று மு.ப. 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நினைவுக்கல் நாட்டல் நிகழ்ச்சி ஈகச்சுடர் ஏற்றல், நினைவுக்கல் திரை நீக்கமும், மலர்மாலை அணிவித்தலைத் தொடர்ந்து போராளிகள், பொதுமக்கள் மலர்வணக்கம் செய்து மௌன வணக்கத்துடன் நிறைவுபெறும்.

இவ்வரலாற்றுச் சாதனையின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் கூட்டம் நாளை இரவு 7 30 மணிக்கு புலோப்பளை பிரதாபன் ச.ச. நிலைய முன்றலில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளுடனான

...தல்கள் பேச்சுகளை பாதிக்காது எனவும் சிலர் எதிர்பார்ப்பது போல் மோதல் நிலை சமாதான முயற்சிக்கு தடையாகாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் ரத்வத்த விடுதலைப்புலிகள் பேச்சுக்கான தமது பிரதிநிதிகள் தொடர்பான விபரத்தை எமக்கு அனுப்பி வைத்தனர் அதற்கு பதிலாக நாம் எமது பிரதிநிதிகளின் விபரத்தை அவர்களுக்கு அனுப்பியுள்ளோம். நாம் பேச்சுக்களுக்காக மூன்று தினங்களை குறிப்பிட்டிருந்தோம் புலிகள் இரு தினங்களை ஏற்றுக் கொண்டு பதில் கடிதம் அனுப்பியிருந்தனர். எனினும் அக்கடிதத்தில் யாழ்ப்பாணத்தில் எங்கு பேச்சுவார்த்தைகளை நடத்துவது என அவர்கள் குறிப்பிடவில்லை எனினும் இவ்விபரத்தை சர்வதேச செஞ்சிலுவை சங்கமூடாக தெரியத்தரமுடியும் எனவும் இரு தரப்பும் இது தொடர்பாக பின்னர் கலந்துரையாடி பேச்சுக்கான இடத்தை தீர்மானிக்க முடியும் எனவும் அமைச்சர் ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

## கிரிக்கற் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் 32ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தும் ஆறு பேர் கொண்ட தோல்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டி இன்று பி.ப. 2மணி தொடக்கம் வரும் முதலாம் திகதி வரை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்

## பிரித்தானிய காசுக் கட்டளை

1994 09 26ந் திகதி முதல் 1994.10.01ந் திகதி வரையான காலப்பகுதிக்கான பிரித்தானிய காசுக் கட்டளைகளின் கொடுப்பனவுப் பெறுமதி ஒரு பவுணுக்கு ரூபா 74/03 ஆகும்,

கொடுப்பனவுப் பெறுமதியினை பெற்றுக் கொள்ளுதலில் பெரும் இடர்கள் எதிர்கொள்ளப்படுவதனால் அவற்றினை வைத்திருப்போர் 1994.10.01அன்று 12 மணிக்கு முன்னர் அவ்வப் பகுதி அஞ்சலகத்தில் காசாக்குமாறு வேண்டப் படுகின்றார்கள்.

## சுழிபுரம் கடற்பரப்பில் மிதந்துவந்த பெண் சடலம்

சுழிபுரம் புளியந்துறை கடற்பரப்பில் மிதந்துவந்தபெண் ஒருவரின் சடலம் ஒன்று அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் முயற்சியால் கரைசேர்க்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் மீனவர்களினால் கரைசேர்க்கப்பட்ட சடலம் இளம்பெண் ஒருவரினதாகும். பாவாடை சட்டை அணிந்து காணப்பட்ட சடலத்தின் காதுகள் இரண்டிலும் தோடுகளும் மூக்கில் மின்னியும் காணப்பட்டன. கையொன்றில் பழைய எரிகாயத் தழும்பும் காணப்பட்டது.

கரைசேர்ந்த சடலத்தினைப் பற்றி சுழிபுரம் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சங்கானை காவல் பணிமனையில் புகார் செய்ததையடுத்து காவல் துறையினர் சடலத்தை இனம் காண்பதற்காக யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

இதேவேளை யாழ் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டியதாகவும் இறந்தவர் மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் எனவும், இவர் திருமணமாகி ஒரு குழந்தைக்கு தாயெனவும் தெரிய வருகின்றது. [சி, 44]

## யாழ். ஆஸ்பத்திரியில்

## எதிர்வரும்

காலப்பகுதியில், சமுதாயம், முதியோரின் நலன் மீது எவ்வளவு அக்கறை கொண்டு உள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்கு சில சிறிய நிக

## அக். 13, 14

வைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மகாநாட்டில் பேசிய பிரதிப் பாது

உள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்கு சில சிறிய நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்து நடாத்துவது மிகவும் அவசியமாகும் விசேடமாக இளைஞர்கள் மத்தியில் முதியோர்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பல பணிகளை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அவர்களின் வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துதல் மிகவும் முக்கியமாகும்''.

ஆகவே முதியோர் இல்லங்களில் உ தியும் முதியோர்களை இந்த வாரத்தில் ஒரு நாளில் சென்று சந்தித்து அவர்களுடன் அளவளாவி சமுதாயம் அவர்கள் மேல் கொண்டுள்ள அக்கறையைப் பிரதி பலிக்கும் வகையில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்துமாறு அவர் வேண்டுகின்றார்.

திகதி வரை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## ரெலோ சார்பில் கருணாகரம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரெலோ அமைப்பு சார்பாக அதன் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் போட்டியிடலாம் என கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

### பேச்சுகள்

ஆரம்பிப்பது இலகுவானது ஆனால் அதனை முடித்து வைப்பதும் சமாதான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதும் அவ்வளவு சுலபமான விடயம் அல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விக்கும் செய்தியாளர் மகாநாட்டில் பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் ஆரம்ப பேச்சுவார்த்தைகளுக்காக அரசு நியமித்துள்ள நான்கு பிரதிநிதிகளும், அடுத்த மாதம் 13-ம், 14-ந் திகதிகளில் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள இருப்பதாக தெரிவித்துள்ளார்.

பேச்சு வார்த்தைக்கான திகதிகள் குறித்து இரு தரப்பும் இணங்கியுள்ளதாகவும், புலிகளுடன் பேச்சுவார்த்தைகளுக்கான வழிமுறைகள், பேச்சுவார்த்தை நடத்துவதற்கான இடங்கள் பற்றி ஆரம்ப பேச்சுக்கள் நடைபெறுமெனவும் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

இதேசமயம் ஆரம்பக்கட்டப் பேச்சுக்களை நடத்த இங்கு வரும் அரசாங்கத்தரப்பு பிரதிநிதிகளின் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். ஆஸ்பத்திரியில்

## ஊழியர்சமுகந்தராமையால் நோயாளிகள் அவதி

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா மருத்துவமனை சமயாசமய ஊழியர்கள் பலர் நேற்று தமது கடமைக்கு சமுகமளிக்காமையால் நோயாளர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேற்படி நிலை ஏற்படுவதற்கு பழைய ஊழியர்களுக்கும் அண்மையில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களுக்குமிடையில் வேலை தொடர்பாக எழுந்த கருத்து வேறுபாடே காரணமென தெரிய வருகின்றது.

மேற்படி ஊழியர்கள் நேற்று தமது கடமைக்கு செல்லாமையால் அவசர நோயாளர் பிரிவான 24ஆம் இலக்க சிகிச்சை களத்தில் இருந் [illegible] க்க நோயாளிகளை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது இதனால் பல நோயாளிகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(சி)

### கண்டெடுப்பு

கே. கே, எஸ். வீதி கோண்டாவிலைச் சேர்ந்த சின்னத்துரை குமாரசாமி என்பவரது தேசிய அடையாள அட்டையும், வடபகுதிக்குள் நுழைவோருக்கான அனுமதிச் சீட்டும், கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

றவில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவும் அமைச்சர் ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

### கடலரக்கனை

வெற்றி நாளாக கொண்டாடவும் அதைச் சாதித்த கடற்கரும்புலி வீரர்களை நினைவு கூரும் வீரவணக்க நாளாகவும் இந்த எழுச்சி நாள் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

கடற்புலிகள் மகளிர் பிரிவின் விசேட தளபதி லெப். கேணல் நளாயினி தலைமையில் மேஜர் மங்கை மற்றும் கப்டன் லக்ஸ்மன், கப்டன் வாமன் ஆகிய கடற்கரும்புலிகள் சிங்கள கடலரசனை மூழ்கடித்து போராட்டத்தை முன்நோக்கித் தள்ளியுள்ளனர்.

சாகரவர்த்தனாவின் பொறுப்பதிகாரியை சிறைப் பிடித்ததுடன், 25ற்கும் அதிகமான கடற்படையினரைக் கொன்று, கப்பலிலிருந்த 'ஐம்பது கலிபர்' துப்பாக்கிகளில் இரண்டைக் கைப்பற்றியதுடன் கப்பலுடன் சேர்த்து இரண்டு சக்தி வாய்ந்த பீரங்கிகளையும் மூழ்கடித்துள்ளனர். இது கடல் நடுவில் எம் வீரர்கள் தொடுத்த மிகப் பெரிய தாக்குதல் நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வீரசாதனை ஒரு பெண் தளபதி தலைமையில் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டது என்பது சாதனைமேல் சாதனையாக அமைந்துள்ளதுடன் ஒரு புதிய வரலாற்றையும் படைத்துவிட்டது.

16-08-1994 அன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கடற்படைக் கப்பல் ஒன்றைத் தகர்த்த முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வரலாற்றுத் தாக்குதலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட ''பெண் கடற்கரும் புலிகளின் சகாப்தம்'' தொடர்ந்தும் பெரும் வெற்றிகளைத் தேடித் தருகின்றன என்பதை 'சாகரவர்த்தனா' மூழ்கடிப்பு சுட்டிக்காட்டுகின்றது.

வடதமிழீழ கடற்பரப்பில் மையங்கொண்டபடி எமது குடியிருப்புக்கள் மீதும் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீதும் சிங்கள கடற்படையின் போர்க்கப்பல்கள் நிகழ்த்திவரும் கொலைத் தாக்குதல்களினால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

தத்தமது குடும்பங்களின் ஜீவனோபாயங்களை ஓட்டுவதற்காக கரையோரம் வலைவீசும் எமது மீனவர்களது உயிர்களை நடுக்கடலில் இருந்தபடி வலை வீசிப்பிடிக்கும் கப்பல்களில் சாகரவர்த்தனாவும் ஒன்று.

இந்த கடலரக்கனை லெப். கேணல் நளாயினி தலைமையில் சென்ற கடற்கரும்புலிகள் வெடிகுண்டு வீசிப்பிடித்து அழித்திருப்பது மகிழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் உரியது என்பதில் ஐயம் இல்லை.

வடபுலத்திலுள்ள படை முகாம்களை, அதன் விநியோக மையமான கொழும்புடன் இணைத்து வைத்திருப்பது சிங்கள கடற்படையாகும். தொப்புள் கொடிபோலச் செயற்படும் இந்தக் கடல் விநியோகக் கப்பல் பாதையை தனது போர்க்கப்பல்களைப் பயன்படுத்தி சிங்களக் கடற்படை பாதுகாக்கின்றது.

இத்தகைய பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போர்க் கப்பல்களில் ஒன்றை தகர்த்து அழித்த லெப். கேணல் நளாயினி தலைமையில் சென்ற கடற்கரும்புலிகள் அணி தங்களை முழுமையாக அர்ப்பணித்து போராட்டத்திற்கு ஒரு பெரிய பலத்தை ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

அந்த வீரசாதனையைக் கொண்டாடுவதுடன் அதைச் சாதித்த கடற் கரும்புலி வீரர்களான லெப் கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் லக்ஸ்மன், கப்டன் வாமன் ஆகியோருக்கு எமது வீரவணக்கத்தையும் செலுத்துவோம்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் மகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற தலைமை பாதுகாவலர்)

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், பருத்தித்துறை ஓடக்கரை வீதியைச் சேர்ந்த சண்முகம் மகேஸ்வரன் அவர்கள் 26-9-94 அன்று காலை கொழும்பில் காலமானார். இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரேமாவதி, சாந்தாவதி, பிரேமகுமார், கெங்காவதி, சாந்தகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும், சாந்தலிங்கம், லோகேஸ்வரா, மகேந்திரலிங்கம், கமலாதேவி ஆகியோரின் மாமனாரும், தியாகேசன், சுகந்தி, தர்ஷினி, சுதர்ஷினி, கார்த்திக், காயத்திரி, பிரேமலதா, சஞ்சீவ், விஜயசேகர் ஆகியோரின் அன்பு பேரனும், நளாயினி, சியாமினியின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இதனை உற்றார், உறவினர், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வ. சிவானந்தன்
(9539)

## தமிழீழத்தின்

தார்கள்.

பெண்கள்பற்றிய பிற்போக்குத் தனமான கருத்துகளும் மூட நம்பிக்கைகளும் ஆழ வேரோடியிருக்கும் எமது சமூகத்தில், சமத்துவம் வேண்டியும் மண்ணின் விடிவை நாடியும் தமிழீழத்தின் புரட்சிப் பெண்கள் ஆயுதமேந்தி நிற்கின்றனர். தம்மை அழிப்பதன் மூலம் எதிரியின் இலக்குகளை அழிக்கும் கரும்புலி வீராங்கனைகளாக உருவாகினர்.

பெண்களைக் கடற்கரைக்குச் செல்லக்கூட அனுமதிக்காத எமது சமூகத்திலிருந்து உருவாகிய இந்த மூன்று பெண் கடற்கரும் புலிகளும், தம் இலக்குகளை அழிப்பதற்கான பயிற்சிகளை தமிழீழ கடற்பரப்பிலேதான் பெற்றார்கள். ஆகாயத்தையே தொட்டுவிட முயல்வது போல் வீசியெழும் அலைகளையும், இரவு நேரங்களிலே கடற் காற்றினால் ஏற்படும் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் தான் இவர்கள் தமது பயிற்சியை எடுத்தார்கள். 1994-09-19 அன்று கற்பிட்டிக் கடற்பரப்பில் நின்ற 'சாகரவர்த்தனா' என்ற சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான போர்க் கப்பலைத் தாக்கி மூழ்கடித்தார்கள். உலகப் பெண்ணினத்துக்கே வழிகாட்டிகளாக, பெண்களால் உயர்ந்த சாதனைகளைச் செய்யமுடியும்' என்ற நம்பிக்கையைக் கொடுத்து தம்மைச் சரித்திரமாக்கினார்கள்.

எமது இயக்கம் மண்விடுதலையை வேண்டி நிற்கும் அதேவேளை பெண் விடுதலையையும் தனது முக்கிய குறிக்கோளாக வைத்திருக்கின்றது. பெண்களை மட்டுமே கொண்ட தனித்துவமான படைப் பிரிவாக, விடுதலைப் புலிகள் மகளிர் படை அணியை வளர்த்து வருகின்றது. களத்திலே சாதனைகளைப் படைத்துவரும் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் வளர்ச்சிப் போக்கு, இந்த மூன்று பெண் கடற் கரும்புலிகளின் ஈகத்தால் நீண்ட தூரம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் தமிழீழப் பெண்கள் ஒவ்வொருவரையும் 'தாம் தமிழீழத்தின் குடிமக்களாக' வாழ்வதில் பெருமைகொள்ள வைத்திருக்கின்றது.

இத்தகைய உன்னதமான அதி உயர்ந்த ஈகத்தைச் செய்த இம் மூவருக்கும் நாம் எமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

கற்பிட்டிக் கடற்பரப்பில் எதிரியின் போர்க் கப்பலை மூழ்கடித்த லெப். கேணல் நளாயினிக்கும், மேஜர் மங்கைக்கும், கப்டன் லக்ஸ்மனுக்கும், கப்டன் வாமனுக்கும் இன்றைய எழுச்சி நாளில் வீரவணக்கம் செலுத்துமாறு தமிழீழ மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி; 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்' பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது